அதிலே பத்து செஜம் அவனை கிழிக்கச் சொல்லு.	Tell him to cut 10 yards out of it.
அது என்ன மொத்தம் ஆச்சுது ?	How much does that amount to?
இருபத்தைந்து ரூபாய்.	25 Rupees.
உன் பேச்சு திருப்பாதே.	Do not break your word (to me.)
ஒரு தடவை நம்பு.	Trust (me) for once.
என் திஸ்து உடுப்புகள் எங்கே ?	Where is my suit of clothes?
அதுகள் இன்னம் தைக்க இல்லை.	They are not made yet.
என் உடுப்புகளை மெத்தநாளாய் வைத்துக்கொண்டிருக்கிறாய்.	You have had my clothes a long time.
எனக்குச் சமயம் இல்லை.	I have no time.
நான் பணம் கொடுக்கமாட்டேன், போய்விடு.	Go away with you, I will not pay you.
ஆர் அங்கே ?	Who (is) there?
இத்தனை நாளாய் எங்கே போய் இருந்தாய் ?	Where have you been so long?
ஆர்பத்நட் துரையிடத்தில் உத்தியோகமாயிருந்தேன்.	I was employed under Mr. Arbuthnot.
அவர் மாசம் என்ன சம்பளம் உனக்குக் கொடுத்தார் ?	How much did he give you a month?
அவர் மாசம் பத்து ரூபாய் எனக்குக் கொடுத்தார்.	He paid me 10 Rupees a month.
மறுபடியும் என்னிடத்தில் உத்தியோகமா யிருப்பாயா ?	Will you be employed again by me?
நீர் அந்தச் சம்பளம் எனக்குக் கொடுத்தால் நான் சேவிப்பேன்.	If you will give me the same pay, I will serve you.
குண்டு போடும் போது வா.	Come (to me) at gun-fire.
கதவு தட்டுகிறது ஆர் ?	Who knocks at the door?
ஐயா, எழுந்திருக்கிற வேளை.	Sir, it is time to get up.
இப்போ என்ன மணி ?	What o'clock is it now?
எழுந்திருக்கிற வேளை அல்ல.	It is not time to get up.
நீ அதிக சீக்கிரமாய் ஏன் என்னை எழுப்ப இல்லை ?	Why did you not awake me sooner.
நான் உம்மை எழுப்பினால் கோபம் செய்வீர் என்று பயப்பட்டு இருந்தேன்.	I was afraid that you would be angry with me if I awoke you.

இப்போதே என் உடுப்புகளைக் கொண்டுவா.	Bring my clothes immediately.
நீர் எந்தச் சட்டை போட்டுக் கொள்ளுவீர்?	What coat will you put on?
கறுப்புச் சட்டை கொண்டா.	Bring the black coat.
அம்பட்டன் வந்தானா?	Is the barber come?
அவன் இன்னம் வர இல்லை.	He has not come yet.
அவன் எப்போதும் நேரமாய் வருகிறான்.	He is always late.
இனிமேல் சீக்கிரமாய் வராவிட்டால் தள்ளிப் போடுவேன் என்று அவனுக்குச் சொல்லு.	Tell him if he does not come early in future, I will discharge him.
அதிக நேரமாச்சுது, நான் அவனுக்காகக் காத்திருக்கமாட்டேன்.	It is too late, I cannot wait for him.
என் சவரக்கத்தி கொண்டா?	Bring my razor.
இதோ, தயாரா யிருக்கிறது.	Here, (it) is ready.
இந்தத் துவாலை அழுக்காய் இருக்கிறது.	This towel is dirty.
என் உடுப்புகளை நன்றாய் சலவை பண்ணாவிட்டால் வேறே வைத்துக்கொள்ளுவேன் என்று வண்ணானுக்குச் சொல்லு.	Tell the washerman if (he) does not wash my clothes better I shall employ another (man.)
கோட்டைக்குப் போகிற வேளை.	It is time to go to the Fort.
என் வண்டி கொண்டுவரக் குதிரைக்காரனுக்குச் சொல்லு.	Tell the groom to bring my carriage.
குமஸ்தா வந்தானா?	Is the writer come?
ஆம், ஐயா.	Yes, sir.
ஏன் நேரம் பொறுத்து வந்தாய்?	Why did you come so late?
என் வீட்டில் கொஞ்சம் அவசியமான வேலை இருந்தது.	I had some urgent business at home.
ஆபீசுக்கு போகிறத்துக்கு முன்னே இதைக் காபி பண்ணு.	Copy this letter before I go to office.
எனக்கு ஒருதாள்கடுதாசிகொடு.	Give me a sheet of paper.
என்னிடத்தில் இல்லை.	I have none.
பீங்கான் கடைக்குப் போய் ஒரு குயர் சீர்மை கடுதாசி வாங்கி வா.	Go to the China bazaar and buy a quire of Europe paper.
கடுதாசியோடு பேனாவும் நான் வாங்கட்டுமா?	Shall I get quills and paper, both?
அப்படிச் செய்.	Do so.
நான் பேனாகத்தி உன்னை வாங்கச் சொன்னேனா?	Did I tell you to buy a pen-knife?
என் பேனாவைச் சீவ என்னிடத்தில் கத்தி இல்லை.	I have no pen-knife to mend my pen.
உன் வாயை மூடு.	Hold your tongue.
எனக்கு ஒரு தாள் கொண்டுவா.	Bring me a sheet of paper.
போய் விடாதே.	Don't go away.

நான் வருமட்டும் இங்கே இரு.	Wait here till I return.
இந்தப் பேனாவைச் சீவு.	Mend this pen.
இந்தக் கடுதாசியை அறு.	Cut this paper.
அந்தக் கடுதாசிக்குள்ளே இந்தச் சீட்டை லகோடாபண்ணு.	Enclose this note in that letter.
இதைத் தபால் ஆபீசுக்கு அனுப்பு.	Send this to the Post Office.
இங்கே ஒரு மனிதன் கடுதாசி வைத்துக்கொண்டிருக்கிறான்.	Here is a man waiting with a letter.
அவனை இங்கே வரச்சொல்லு.	Tell him to come here.
அவன் துரை வீட்டிலிருக்கிறாரா, வெளியே போனாரா, அவனைக் கேளு?	Ask him, is his master at home, (or) gone out?
அவன் தன் துரை மலைக்குப்போனார் என்று சொல்லுகிறான்.	He says that his master has gone to the Mount.
அவர் சமுசாரத்தோடேபோனாரா?	Did he go with his family?
இல்லை, ஐயா.	No, sir.
இந்தக் கடிதம் துரைசானிக்குக் கொடு.	Take this letter to (your) mistress.
பையா, என் வண்டிக்கு உத்தரவு பண்ணு.	Boy, order my carriage.
ஆர் அங்கே?	Who (is) there?
நான் கொல்லற்றுக்காரன்.	I (am) a bricklayer.
இன்னொரு மனிதன் ஆர்?	Who (is) the other man?
அவன் தோட்டக்காரன்.	He (is) the gardener.
உங்கள் இரண்டுபேரையும் பார்க்க நான் சந்தோஷப்படுகிறேன்.	I am very glad to see you both.
வீடு கட்ட ஒரு மனை எனக்குக் கிடைக்குமா?	Can you get me a piece of ground to build a house?
எண்ணூரில் ஒரு மனை இருக்குது.	There is a piece of ground at Ennore.
உமக்கு இஷ்டமானால், நீர் அதை வாங்கக் கூடும்.	If you like, you can purchase it.
அது யாருடையது?	Who does it belong to?
அது பேகர் துரையினது.	It belongs to Mr. Baker.
அதின் அகலம் நிகளம் என்ன?	What is the breadth and length of it?
நாற்பது அடி நிகளமும் எண்பது அடி அகலமும் உண்டு.	It is forty feet long and eighty feet broad.
நாற்பது அடி அகலமும் அறுபது அடி நிகளமுந்தான் எனக்கு வேண்டும்.	I only require forty feet broad and sixty feet long.
அப்போ அது ஒரு மனை அல்லது இரண்டாயிரத்து நானூறு குழிக்கு அதிகமாயில்லை.	Then it contains no more than 1 ground or 2,400 square feet.
அதிலே மரங்கள் உண்டா?	Are there any trees on it?

அங்கே சில தென்ன மரங்களும், மாமரங்களும், வாழைச் செடிகளும் உண்டு.	There are a few cocoanut, mango, and plantain trees.
அதற்கு அவர் என்ன கேட்கிறார்?	What does he want for it?
அதற்கு விலை ஆயிரம் ரூபாய் சொல்லுகிறார்.	He says the price of it is a thousand Rupees.
உன்னோடேகூட ஒரு மேஸ்திரியை அழைத்துக் கொண்டு போய் அதை அளக்கச் சொல்லு.	Take a maistry with you and get that ground measured.
நாளை சாயந்திரம் அஞ்சு மணிக்கு அதைப் பார்க்க நானே வருவேன்.	I will come myself to-morrow evening at 5 o'clock to see it.
அங்கே நீயும் சொந்தக்காரனும் காத்திருக்கக் கோருகிறேன்.	I wish you and the owner of it to wait there.
ஒரு வீடு கட்டுவதற்கு வேண்டிய சாமான்களுக்கு மதிப்புப் போடு.	Make out an estimate of the materials requisite for the building of the house.
டாப்பு படி எல்லா சாமான்களையும் வாங்கு.	Purchase every thing according to the list.
அவர்கள் நேற்று அஸ்திவாரம் போட்டார்களா?	Did they lay the foundation yesterday?
நான் அதை இன்றைக்கு முடிப்பேன்.	I will finish it to-day.
கொஞ்சம் விரை விரைக்கத் தோட்டக்காரனுக்குச் சொல்லு.	Tell the gardener to sow some seeds.
தோட்டத்தில் எந்தப் பக்கத்தில் விரைப்பேன்?	In what part of the garden shall I sow?
லாயத்துக்கு அருகில்.	Close to the stables.
இந்தச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சு.	Water these plants.
அந்தக் கிளையை வெட்டிப்போடு.	Cut off that branch.
உன் பிராது என்ன?	What is your complaint?
ஐயா, இந்த மனிதன் ராத்திரி ரஸ்தாவிலே என்னை மடக்கி, மெத்த அடித்ததும் (அல்லாமல்), என் பாகையையும் பறித்துக் கொண்டு ஓடிப்போய்விட்டான்.	Sir, this man attacked me on the road last night, and gave me a severe beating, and ran away with my turband.
அவன் சொல்லுகிறது நிஜமா?	(Is) what he states true?
இல்லை ஐயா, அது எல்லாம் பொய்யாய் இருக்குது.	No sir, it is all false.
சாக்ஷியைக் கூப்பிடு.	Call the witness.
துபாசி எங்கே?	Where (is) the Interpreter?
ஐயா, இதோ நானிருக்கிறேன்.	Sir, I am here.
அவனைச் சத்தியம் பண்ணச் சொல்லு.	Tell him to swear.
அவனை வழக்கமான கேள்விகளைக் கேளு.	Ask him the usual questions.
உன் பேர் என்ன?	What is your name?

என் பேர் ராமன்.	My name (is) Raman.
நீ என்ன ஜாதி?	What caste (are) you?
நான் தமிழன்.	I (am) a Tamilian.
நீ எங்கே குடியிருக்கிறாய்?	Where do you live?
நான் எழும்பூரில் குடியிருக்கிறேன்.	I reside at Egmore.
உன் வேலை என்ன?	What is your employment?
நான் தலைமையான சம்பிரதி.	I am an head accountant.
இந்த மனிதனுடைய பிராதைக் குறித்து உனக்கு ஏதாவது தெரியுமா?	Do you know any thing about this man's complaint?
இராத்திரி பதினொரு மணிக்கு பீங்கான் கடை வழியே நான் போகும் போது இந்த பிராது காரன் நடுத் தெருவிலே விழுந்திருக்கக் கண்டேன்.	Last night about 11 o'clock as I was passing through the China bazaar, I saw the plaintiff lying on the ground in the middle of the street.
இன்னும் அதிகமாய் ஏதாகிலும் நீ சொல்ல வேண்டியது இருக்கிறதா?	Have you any thing more to say?
எனக்குவேறொன்றும்தெரியாது.	I know nothing more.
நீ பிரதிவாதிக்கு சினேகனாய் இருக்கிறாயா?	Are you a friend to the defendant?
இல்லை, ஐயா.	No, sir.
நீ தமிழ்ப் பேசுவாயா?	Can you speak Tamil?
நான் கொஞ்சம் பேசுவேன்.	I can speak a little.
நான் படிப்பேன், ஆனால் பேச மாட்டேன்.	I can read, but I cannot speak.
எனக்கு கொஞ்சம் பேச்சுகள் தெரியும்.	I know a few words.
ஆர் கற்றுக்கொடுப்பார்?	Who can teach (me)?
ஆராவது ஒரு வாத்தியார் உனக்குத் தெரியுமா?	Do you know any teacher?
எனக்கு ஒருவர் தெரியும்.	I know one.
அந்த வாத்தியார் பெயர் என்ன?	What (is) the name of that teacher?
அவர் மெத்த கெட்டிக்காரர்.	He (is) very clever.
அவன் மெத்த முட்டாள்.	He (is) very stupid.
நான் அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போவேன்.	I will go to that school.
எனக்குப் புத்தகம் கொடு.	Give me (a) book.
உன் புத்தகம் திற.	Open your book.
நான் எங்கே ஆரம்பிக்கட்டும்?	Where shall I begin?
இது மெத்த வருத்தம்.	This (is) very difficult.
இது மெத்த லேசு.	This (is) very easy.
அவன் தெலுங்கனைப் போலப் பேசுகிறான்.	He speaks like a Telugu man.
எழுத்துக் கூட்டு.	Spell it.
இன்றைய பாடம் எங்கே?	Where (is) to-day's lesson?

முதல் பக்கம் ஆரம்பி.	Begin at the first page.
நேற்று நான் இங்கே விட்டேன்.	Yesterday I left off here.
நீ அதைப் பாராமல் சொல்லுவாயா?	Can you say it by heart?
நீ ஏன் படிக்கஆரம்பிக்கவில்லை?	Why don't you begin to read?
அவ்வளவு உறக்கப் படிக்காதே.	Don't read so loud.
நீ அதிக மெதுவாய் படிக்கிறாய்.	You read too slow.
உனக்குத் தெரியுமா?	Do you understand?
எனக்கு அதின் அர்த்தம் சொல்லு.	Tell me the meaning of it.
நான் தப்புப் பேசினால் திருத்து.	If (I) speak wrong, correct (me).
நான் தப்புப் பேசினால் சொல்லு.	Tell (me) if (I) speak wrong.
நான் ஆறுதடவை சொன்னேன்.	I told (him) six times over.
அவனுக்கு நல்ல ஞாபகம் உண்டு.	He has a good memory.
இந்த வாக்கியத்தை தமிழ்ப் பாஷையிலே திருப்பு.	Translate the sentence into Tamil.
அவன் இடத்துக்குப் போ.	Go to (*or* take) his place.
அவன் அந்த வகுப்பிலே பெரியவன்.	He (was) at the head of the class.
அவன் அந்த வகுப்புக்குத் தாழ்ந்தவன்.	He (is) at the bottom of the class.
அவன் தப்புச் செய்தான்.	He made a mistake.
மறுபடியும் படி.	Read again.
அவ்வளவு சீக்கிரமாய்ப் படிக்காதே.	Don't read so quick.
எனக்குக் கேட்க இல்லை.	I cannot hear (you).
எனக்கு கொஞ்சம் பாடம் கொடு.	Give me a short (little) lesson.
நீ கூடிய மட்டும் படித்துக் கொள்ளு.	Learn as much as you can.
அவன் மெத்த சுறுசுறுப்பு.	He (is) very sharp.
அவன் பள்ளிக்கூடத்துக்கு வந்து எத்தனை நாள் ஆச்சுது?	How long has he been in the school?
கற்பலகை மேல் எழுது.	Write on a slate.
நீ அதிக சீக்கிரமாய் எழுத வேண்டும்.	You must write faster.
நீ எழுதினதைக் காட்டு?	Show what you have written?
நீ அதிக நெருக்கமாய் எழுதுகிறாய்.	You write too close.
உன் சொந்த புத்தியினால் எழுது.	Write from your head (knowledge).
உனக்கு கணக்குத் தெரியுமா?	Do you understand accounts?
அதெல்லாம் சரியா யிருக்கிறது.	It is all right.
இந்த தப்பு திருத்து.	Correct this mistake.
அங்கே நிறுத்து.	Stop there.
என் புத்தகம் எங்கே?	Where (is) my book?

அதை எங்கே வைத்தாய்?	Where did you lay it?
அதை எங்கேயுங் காணேன்.	I cannot find it any where.
என் காகிதத்தைக் கறையாக்கினது யார்?	Who (has) blotted my paper?
இதைச் சுறண்டு.	Scratch it out.
இங்கி புட்டி எடுத்துக்கொள்ளு.	Take up the ink-stand.
அதை நான் பார்க்கட்டும்.	Let me look at it.
அவன் என் இங்கிபுட்டியை எடுத்துக்கொண்டான்.	He has taken my ink-stand.
உன் இடத்திலே நில்லு.	Stand in your (proper) place.
எனக்கு முன்னே நில்லு.	Stand before me.
இருவரும் நில்லுங்கள்.	Stand both of you (together).
நீ என்ன செய்கிறாய்?	What are you doing?
அவன் நேரம் பொறுத்து வருகிறான்.	He comes late.
நீ ஏன் பார்க்கிறாய்?	Why do you look at (it)?
நீ ஏன் பேசுகிறதில்லை?	Why don't you speak?
ஆரம்பிக்கும் இடத்தைக் காட்டு.	Show (him) where to begin.
வெளியே போகச் சிலவு கேள்.	Ask leave to go out.
இந்தப் பேச்சுக்கு இரண்டு அர்த்தம் உண்டு.	This word has two meanings.
அந்தப் பேச்சு இந்த இடத்துக்கு உதவுமா?	Will that word do in this place?
அந்த வார்த்தை எங்கே உதவும்?	Where is that word used?
அதின் வித்தியாசமான அர்த்தத்தைச் சொல்லு.	Tell (me) its different meanings.
அது சம்பாஷணையிலே வருகிறது அரிது.	It (is) seldom used in conversation.
அவன் கடின வார்த்தையாய் பேசுகிறான்.	He speaks in difficult language.
அவன் நூற்றுக்குப் பத்து நஷ்டப்பட்டான்.	He lost 10 per cent.
அவன் செத்த போது அவனுக்கு இருபது வயது இருந்தது.	He was 20 years old when he died.
நான் பத்து வருஷம் அந்த ஊரில் இருந்தேன்.	I lived 10 years in that country.
இந்த மூட்டை பத்து ரூபாய் இடை.	This parcel weighs 10 Rupees.
இந்தப் புத்தகத்தில் நாற்பது பக்கங்கள் இருக்கின்றன.	There are 40 pages in this book.
இது பத்து ஆணி; நான் இரண்டு தரம் அதுகளை எண்ணினேன்.	There are 10 nails; I have counted them twice.
அவனுக்கு முப்பது ரூபாய் கடன் இருக்கிறது.	He is 30 Rupees in debt.
அவன் அஞ்சாம் தேதி வந்தான்.	He came on the fifth.
நான் வருகிற மாசம் அஞ்சாம் தேதி உனக்குக் கொடுப்பேன்.	I shall pay you on the 5th of next month.
இது முதல் தடவை.	This (is) the first time.

அவன் மூன்று ரூபாய்க்கு அதைக் கேட்டான்.	He offered it for 3 Rupees.
இன்றைக்கு என்ன தேதி?	What day (of the month is it)?
போன சனிக்கிழமை முதல்தேதி.	Last Saturday (was) the 1st.
அவன் வெய்யிலுக்கு முன்னே புறப்பட்டான்.	He was out before sunrise.
நான் புதன் கிழமை ஊருக்குப் போகச் சிலவு வாங்கிக்கொண்டேன்.	On Wednesday I took leave in order to go to the village.
நான் வெள்ளிக்கிழமை மத்தியானம் ஆற்றைக் கடந்தேன்.	On Friday at noon I passed the river.
நான் நாயிற்றுக்கிழமை சாயந்திரம் ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன்.	On Sunday at sunset I reached the village.
நான் மூன்று வாரம் இங்கே இருப்பேன்.	I will remain here for three weeks.
நான் அஞ்சு நிமிஷத்துக்குள்ளே வருவேன்.	I will return in five minutes.
நான் தைமாசம் எட்டாம் தேதி பிறந்தேன்,	I was born on the 8th of January.
நான் பங்குனிமாசம் ஏழாம் தேதி பிறந்தது.	The 7th March is my birthday.
மழை ஆடிமாசத்துக்கு முன்னே வழக்கமாய் வருகிறது.	The rains generally set in before July.
நான் போன வருஷம் ஆவணி மாசம் அங்கே இருந்தேன்,	I was there in August last year.
புரட்டாசி மாசத்தில் காவேரிப் பெருக்குக்கு மெத்த பலமுண்டு.	The current of the Cavery is very strong in September.
நான் என் ஊரை ஐப்பசிமாசம் கடைசியில் விட்டுவிட்டேன்.	I left my village about the end of October.
உன் கெடியாரத்தில் என்ன மணி?	What o'clock (is) it by your watch?
உன் கெடியாரம் சரி அல்ல.	Your watch is not right.
நான் சாவி கொடுக்க மறந்து போனேன்.	I forgot to wind it up.
என் கெடியாரம் நின்று போச்சு.	My watch has stopped.
பங்காக்காரனை தூங்காதே யென்று சொல்லு.	Tell the punkah-man not to go to sleep.
அவன் தூங்கினால் நான் அவனுக்கு அபராதம் போடுவேன்.	If he goes to sleep I shall fine him.
ஐயா, சீக்கிரமாய் வெய்யில் காயும்.	Sir, the sun will soon rise.
குதிரைக்காரன் குதிரை கொண்டுவந்தானா?	Has the horse-keeper brought the horse?
ஆம் ஐயா, குதிரை வாசற்படி அண்டை நிற்குது.	Yes, Sir, the horse is standing at the door.

அதுக்கு எந்த ஜீனி போட்டிருக்கிறது?	Which saddle has he put on him?
புது ஜீனி.	The new saddle.
நான் திரும்பி வருமுன்னே குளிக்கும் அறை தயாராய் இருக்கட்டும்.	Have the bath ready when I return.
நான் வேலைக்குப் போகவேண்டிய படியால் சீக்கிரமாய் தேமேசை ஆகட்டும்.	I want breakfast early as I must go out on business.
எத்தனை மணிக்கு உமக்கு வேண்டும்?	At what o'clock do you want it?
ஒன்பதே கால் மணிக்கு.	At $\frac{1}{4}$ past 9 o'clock.
ஒன்பதரைமணிக்கு?	At $\frac{1}{2}$ past 9 o'clock?
ஒன்பதே முக்கால் மணிக்கு.	At $\frac{1}{4}$ to 10.
பல்லக்குசாரட்டுதயார்பண்ணு.	Get the palankeen carriage ready.
வெள்ளைக் குதிரை நொண்டி.	The white horse is lame.
அதுக்கு என்ன நோவு?	What is the matter with him?
அதின் குளம்பு புண்ணு.	His hoof (is) sore.
அதின் கால் சுளுக்கு.	He (has) sprained his foot.
சிகப்புக் குதிரைக்குச் சொறி.	The red horse has got the mange.
அதுக்கு கெந்தகம் போடு.	Put sulphur on it.
பொத்தான் மாட்டு.	Sew on a button.
அவனுக்குக் காய்ச்சல் என்று ஒரு மனிதனோடு சொல்லி அனுப்பினான்.	He sent a man to say that he has fever.
அவன் அடிக்கடி மெத்த நோவாய் இருக்கிறான்.	He (is) very often sick.
அவன் கிழவனாய் இருக்கிறான்.	He is an old man.
அவனுக்குப் பதில் அவன் மகன் வேலைசெய்கிறான்.	His son acts for him.
அவன் சோம்பேறியாய் இருக்கிறான்.	He is a lazy fellow.
அவன் நன்றாய் வேலை செய்யாவிட்டால் அவனைத் தள்ளிப்போட்டு வேறொருவனை வைத்துக் கொள்ளுவேன்.	If he cannot do better work I shall send him away and get another man.
அவன் அடிக்கடி எனக்கு தொந்திரவு கொடுக்கிறான்.	He is frequently giving me trouble.
வண்ணான் மேசோடுகளை மெத்தவும் கல்லிலே அடிக்கிற படியால் அது ஆறுமாசம் கூட வருகிறது இல்லை.	The washerman beats the clothes so much that a pair of stockings does not last 6 months.
தெளிவானதண்ணீர்கொண்டா.	Get clean water.
பேசின்தண்ணீர் ஊற்றிப்போடு.	Empty this basin.
இந்த பேசின் சுத்தியாய் இல்லை.	This basin is not clean.

நீ அதை நன்றாய்க் கழுவாவிட்டால் சுத்தியாய் இராது.	You must rub it well, else it will not become clean.
இந்தப் பெரிய கால் சட்டை பழுது பார்.	Mend these long drawers.
இந்தச் சட்டை மெத்த சின்னது.	This coat is too short (for me.)
எனக்கு இந்தக் கால்சட்டை அதிக நீளமாய் இருக்கிறது.	These trowsers are too long for me.
எனக்கு மெத்த இளப்பாய் இருக்கிறது.	I am very tired.
எனக்கு மெத்த தாகமாய் இருக்கிறது.	I am very thirsty.
எனக்கு மெத்த தூக்கமாய் இருக்கிறது.	I am very sleepy.
எனக்கு மெத்த பசியாய் இருக்கிறது.	I am very hungry.
எனக்கு எவ்வளவு தாகமாயிருந்தாலும் நான் அந்தக் கெட்ட தண்ணீர் குடிக்க மாட்டேன்.	Although I am thirsty, I will not drink that bad water.
அவன் அந்தத் தண்ணீரைக் குடித்தால், அவனுக்கு வயிற்றிலே நோவு வரும்.	If he drinks that water, he will get a pain in his belly.
ஆயா எங்கே?	Where is the ayah?
அவளால் கூடிய மாத்திரம் சீக்கிரமாய் குழந்தைக்கு வெந்நீர் மெத்தை மேலே கொண்டு போகச் சொல்லு.	Tell her to take hot water up-stairs for the child as soon as ever she can.
இந்தத் தண்ணீர் சுட இல்லை.	This water is not boiling.
இது மிதமான வெந்நீர்.	It is tepid water.
அவள் என்ன முட்டாள்.	What a stupid woman (she is.)
சுறுசுறுப்பான ஆயாளைச் சம்பாதித்துக் கொண்டுவா.	Get a sharp woman for an ayah.
உன் பழைய வேலைக்காரன் திருடினபடியால் போலீசுக்குக் கொண்டுபோகப்பட்டான்.	Your late servant has been taken up by the Police for stealing.
அவன் என்ன திருடினான்?	What did he steal?
இராத்திரி கிரீன் துரை வீட்டுக்குப் போய் பொன் கெடியாரம் திருடினான்.	He went in Mr. Green's house at night and stole a gold watch.
அவன் எப்படி அகப்பட்டான்?	How was he found out?
அவன் கடையிலே விற்கப் போனபோது கடைக்காரன் சந்தேகப்பட்டு போலீசுக்குத் தெரிவித்தான்.	When he wanted to sell it in the bazaar the shop-keeper became suspicious and told the Police.
போலீசில் விசாரணை செய்தபோது கெடியாரம் திருடினதாகக் காணப்பட்டது.	The Police enquired about it, and then found that the watch had been stolen.
நாளைக்குச் சேப்பாக்கத்துக்குச் சலவை துவாலை கொண்டா.	Bring clean towels to Chepauk to-morrow.

மறந்துபோகாதே.	Don't forget.
மறந்துபோனால், உன்னைத் தண்டிப்பேன்.	If you forget, I shall punish you.
நீயே அவைகளைக் கொண்டா.	Bring them yourself.
என் உடுப்புகளைத் தயார் பண்ண ஏன் மறந்துபோனாய்?	Why did you forget to have my clothes ready?
ஐயா, என் தம்பி பெண்சாதி செத்துப் போனாள்.	Sir, my brother's wife is dead.
இன்றைக்கு எனக்கு ரஜா வேண்டியதாய் இருக்குது.	May I have leave for to-day?
ஆம், ஆனால் நீ திரும்பி வருமட்டும் உன் வேலை செய்ய ஒருவனை அனுப்ப வேண்டும்.	Yes, but you must get some one to act for you until you return.
என் வேலை செய்ய ஒரு சினேகிதனை நான் அனுப்புவேன்.	I will send a friend to do my work.
நாளைக்குச் சாயந்திரம் வெளியே போகிறேன்.	I am going out to-morrow evening.
எல்லா விளக்கிலும் எண்ணெய் வாரு.	Pour oil in all the lamps.
நான் வீட்டிலே யிருக்க மாட்டேன்.	I shall not be at home.
நான் மறுபடியும் வீட்டுக்கு வர நேரம் செல்லும்.	It will be late before I return home.
கதவுகள் எல்லாம் நன்றாய்ச் சாத்தி யிருக்குதா வீட்டைச் சுற்றிப் போய்ப் பார்.	Go round the house and see that all the doors are properly fastened.
ஆனால் நீ நம்பிக்கை யுள்ளவன் அல்ல.	But you (are) not trustworthy.
நீ மோசக்காரனாய் இருக்கிறாய், நான் உன்னை நம்பமாட்டேன்.	You are a scamp, I cannot trust you.
நீ என்னோடு மூன்று தரம் பொய் சொன்னாய்.	You have three times told me a lie.
உன் வார்த்தையை நான் எப்படி நம்பக் கூடும்?	How can I believe your word?
நீ மெய் சொன்னாலும் எனக்குச் சந்தேகம்.	Even when you tell me the truth I doubt you.
குழந்தைக்குச் சரியான ஜோடு கொண்டா.	Get a pair of shoes which will fit the child.
நாளைக்குக் காலமே பத்து மணிக்கு நூறு படி கொள்ளும், ஐம்பது படி கடலையும் அனுப்பும்படி, முத்துச்சாமிக்குக் காகிதம் எழுது.	Write a letter to Muthuchami and tell him I want 100 measures of gram and 50 measures of Bengal gram by 10 o'clock to-morrow morning.
ஸ்மித்து துரை உம்மைக் காண வந்தபோது தான் நீர் வீட்டை விட்டுப் போனீர்.	You had scarcely left the house when Mr. Smith came to visit you.

நான் வீட்டில் இல்லாததற்கு விசனப்படுகிறேன்.	I am sorry I was not at home.
நான் வெளியே போய் இருக்கும்போது அவர் மறுபடியும் வந்தால் நான் வரு மட்டும் உட்காரச் சொல்லு.	If he comes again when I am out, ask him to sit down until I return.
உன் துரையும் துரைசாணியும் எப்படி யிருக்கிறார்கள் ?	How are your master and mistress ?
ஐயா, சுகமாய் இருக்கிறார்கள்.	They are very well, sir.
குழந்தை நோவாய் இருக்கிறது, அதுக்குப் பல் முளைக்கிறது.	The baby is sick, he is getting his teeth.
அதினாலே கொஞ்சம் முறடாயும், ஜுரமாயும் இருக்கிறது.	On this account he is cross and a little feverish.
அது மெத்த நேத்தியான குழந்தை.	He (is) a pretty child.
பருந்து அசங்கியமான பறவை.	The kite (is) an ugly bird.
புலி பயமுள்ள மிருகம்.	The tiger (is) a fierce beast.
குதிரை சுறுசுறுப்பான மிருகம்.	The horse (is) a swift animal.
மாடு மெதுவாய்ப் போகிறது.	The bullock moves slowly.
நாய் குலைக்கிறது.	The dog barks.
பசு கூப்பிடுகிறது.	The cow lows.
குதிரை கனைக்கிறது.	The horse neighs.
ஆடு கத்துகிறது.	The sheep bleats.
நரி ஊளையிடுகிறது.	The jackal howls.
யானை வீரிடுகிறது.	The elephant trumpets.
கன்று கத்துகிறது.	The calf bleats.
கழுதை கத்துகிறது.	The ass brays.
சிங்கம் கெர்ச்சிக்கிறது.	The lion roars.

SENTENCES

USEFUL IN THE DEPARTMENT OF PUBLIC WORKS.

Most of the following English Sentences are to be found in a pamphlet on Urdu—published at the Engineering College at Roorkee.

அங்கே வெட்டாதே.	Don't dig there.
எத்தனை ஒட்டர்கள் இருக்கிறார்கள் ?	How many diggers are there ?
எத்தனை பேர் வெட்டுகிறார்கள் ?	How many men are digging ?
இன்னம் கொஞ்சம் ஆழம் வெட்டு.	Dig a little deeper.
வெட்டி யிருக்கிறது எவ்வளவு ஆழம் ?	How deep is the excavation ?
அதின் ஆழம் என்ன ?	What is it's depth ?
நான் இன்னம் அளக்க இல்லை.	I have not yet measured.
அவனை இங்கே வெட்ட விடாதே.	Don't let him dig here.

அவனை என்னிடத்தில் அனுப்பு.	Send him to me.
அவன் வந்து இருக்கிறானா?	Has he come?
நான் அவனைப் பார்க்க இல்லை.	I do not see him.
இங்கே உன் மண்வெட்டியோடு வா.	Come here with your hoe.
இதுக்குக் காம்பு இல்லையா?	Is there no handle to this?
இந்தக் காம்பு தளர்ந்திருக்கிறது.	This handle is loose.
அதைச் சரியாய்ப் போடு.	Put it to rights.
இதின் முனையிலே ஒரு சின்ன மராப்புப் போடு.	Put in a small pin of wood at this end.
மற்றொரு பாரையினாலே அதை அடி.	Drive it in with another spade.
இப்போது அது சரியாய் இருக்கிறதா?	Now is it all right?
வேறொரு மனிதனைக் கூப்பிடு.	Call another man.
அவனை வேறொரு கூடை கொண்டு வரச் சொல்லு.	Tell him to bring another basket.
அவனிடத்திலே அதைக் கேளு.	Ask him for it.
அவனிடத்திலே ஒன்று மில்லையா?	Has he none?
திரும்பி அவனைக் கேளு.	Ask him again.
இந்த வழி வா.	Come this way.
அவனவன் வேலையை அவனவனுக்குக் காட்டு.	Point out to every one his work.
அது எப்படி நேரிட்டது உனக்குத் தெரியுமா?	Do you know how it happened?
ஆனால், விவரித்துச் சொல்லு.	Explain then.
இது உனக்குத் தெரியுமா?	Do you understand this?
அவன் உனக்குத் தெரியச் சொன்னானா?	Did he make you to understand?
அவனுக்கு நன்றாய்த் தெரியாது.	He does not understand it well.
நமக்கு வேண்டியதை உனக்குத் தெரியச் சொன்னானா?	Did he make you understand what we wanted?
அவனுக்கு நன்றாய்த் தெரியும்.	He understood it well.
அதை இங்கே கொண்டுவா.	Bring it here.
மற்றவர்கள் எல்லாரும் வேலை செய்கிறார்களா?	Are the rest of the men all at work?
முதல் வேலைக்கு எத்தனை பேர் போனார்கள்?	How many men went to the first work?
எத்தனை பேர் மீதியாய் இருக்கிறார்கள்?	How many men are remaining?
மொத்தம் எத்தனை பேர்?	How many men altogether?
நாலு பேரைக் கூப்பிடு.	Call four men.
நாலு பேரை இங்கே வை.	Place four men here.
அவர்கள் மெத்த நெருக்கமாய் இருக்கிறார்கள்.	They are too close.
அது அவசியமாய் வேண்டியதே இல்லை.	It is not at all necessary.

நான் அந்த மரத்தை வேரோடு பிடுங்கட்டுமா ?	Shall I root out the tree ?
அது கீழே விழுந்தது.	It has fallen.
அதை வெட்டி கிளைகளை என்னிடத்திலே கொண்டா.	Cut it down and bring the branches to me.
இப்போது வேரோடு பிடுங்கி ஆயிற்று அல்லது ஆச்சுது.	Now it has been uprooted.
அந்த இடத்தில் என்ன விதமான மண்ணு இருக்கிறது ?	What kind of soil is there at that place ?
மணல் நிலம்.	Very sandy.
இந்தக் களிப்பான களிமண் எங்கே கிடைத்தது ?	Where was this stiff clay got ?
அதின் மேலே இருந்தது என்ன ?	What was above it ?
இது எல்லாம் மணலா ?	Is this all sand ?
இது மெத்தவும் கெட்டி நிலம்.	This is exceedingly hard ground.
மண் வெட்டி உடையும்.	The hoe will break.
அதை உடைக்காதே.	Don't break it.
அது இப்போது உடைகிறது பார்.	See it is now breaking.
நிறுத்து.	Stop.
உனக்குக் கேட்க இல்லையா ?	Don't you hear ?
இங்கே ஒரு சீர்மை கோடாலி வேண்டியது.	Here a pickaxe will be required.
உன்னிடத்தில் சீர்மை கோடாலிகள் இருக்கிறதா ?	Have you pickaxes ?
ஆனால் இது கிடக்கட்டும்.	Then let this alone.
நாங்கள் அதை நிரப்பட்டுமா ?	Shall we fill it up ?
இல்லை, அது கிடக்கட்டும்.	No, let it alone.
இந்த ஒரு சக்கர வண்டியின் சக்கரம் தளர்ந்து இருக்கிறது.	The wheel of this barrow is loose.
அது சுத்தமாய் ஒடிந்து போச்சுது.	It is broken entirely.
அது உதவாது.	It is of no use.
ஆனால், இது நல்லதும் பலமும் உள்ளதாய் இருக்கிறது.	But this is a good one and strong.
நிலம் மெத்த சதுப்பு ஆகையால் நீ பலகை போட வேண்டும்.	The ground is very soft; you must lay down a plank.
உன்னிடத்திலே எத்தனை பலகைகள் உண்டு.	How many planks have you ?
இங்கே பலகைகள் இல்லை.	There are no planks here.
ஒரு (பலகை)யும் இல்லை.	Not even one.
இந்த வழி வா, இந்த நிலம் மெத்த கெட்டியாய் இருக்கிறது.	Come this way, this ground is harder.
இந்த இடம் கொஞ்சம் கெட்டித்து இருக்க வேண்டும்.	This place must be rammed a little.
இந்த திமிசு கட்டை மெத்த லேசாய் இருக்கிறது.	This rammer is very light.

இதிலும் மெத்த கனமானது வேண்டியது.	A heavier one than this will be necessary.
அது வேண்டி யிருக்கும்.	It will be necessary.
வேண்டியது என்ன?	What is that you want?
இது வேண்டியதா?	Is this required?
இந்த வேலை இன்றைக்குச் செய்ய வேண்டுமா?	Must this work be done to-day?
அவ்வளவு அவசியமாய் வேண்டியது இல்லை.	There is no such urgent necessity.
நீ நாளைக்குத் துவக்க வேண்டும்.	You must begin from to-morrow.
ஒரு கூடை கொண்டா.	Bring a basket.
இதிலும் மெத்த பெரிதாய் இல்லையா?	Is there none larger than this?
இதைப் போல் இருக்கிற கூடைக்கு நீ என்ன சொல்லுவாய்?	What do you call such a basket as this?
அதற்கு வேறு பேர் இல்லையா?	Is there no other name for it?
அதுதான் பேர்.	That is the word.
அதுகள் எங்கே இருந்து வருகிறது?	Where do they come from?
ஆற்றங் கரையின் அடிவாரத்தில் இருந்து (வருகிறது.)	From the low land on the banks of the river.
அதுகள் அங்கே செய்யப் பட்டதா?	Are they made there?
ஆம், அதுகள் அங்கே செய்யப்பட்டது.	Yes, they are made there.
அதுகள் அந்த இடத்திலிருந்து வாடிக்கையாய் வருகிறது.	They generally come from that quarter.
கூடை முடைகிறவர்கள் அங்கே இருக்கிறார்களா?	Do the basket-makers live there?
இல்லை, அவர்கள் இங்கே இருக்கப்பட்டவர்கள்.	No, they are men of this place.
அவர்கள் கூடைகளும் பாய்களும் முடைய அங்கே போகிறார்கள்	They go there to make baskets and mats.
என்ன விதமான பாய்?	What kind of matting?
ஓலைப்பாயும் கோரைப்பாயும்.	Palm leaf and grass matting.
எல்லாக் கூடைகளிலும் நிரப்பு.	Fill all the baskets.
அந்த மண்ணை இந்தப் பள்ளத்திலே போடு.	Throw the earth into this pit.
அதிலே அல்ல.	Not into that one.
நிரப்ப வேண்டியது இதுதான்.	This is the one which it is requisite to fill up.
அந்தக் குழி ஆழம் போதாது.	That pit is not deep enough.
நீ அந்தக் குழிவெட்டச்சே என்ன விதமான மண்ணு கண்டாய்?	What kind of soil did you find in digging that hole?
இங்கே பருக்காங்கல் இல்லையா?	Is there no gravel here?
இது எங்கே யிருந்து வந்தது?	Where was this obtained?

இது பள்ளத்திலிருந்து எடுக்கப்பட்டதா?	Did it come out of a pit?
எந்தப் பருக்காங்கல்லோ? எனக்குத் தெரியாது.	Which gravel? I did not understand.
இந்த ரஸ்தாவுக்குப் போட்ட பருக்காங்கல்.	The gravel with which this road is made.
இது ஆற்றின் கரைகளில் இருந்து வந்தது.	This came from the banks of the river.
நீ எனக்கு அந்த இடம் காட்டுவாயா?	Can you show me the place?
இப்போது அல்ல; அங்கே மெத்த தண்ணீர் உண்டு.	Not just now; there is much water there.
ஆறு பெருகினது.	The river has risen.
அந்தக் குன்றுகளிலே மெத்த மழை பெய்தது.	There has been a great deal of rain in the hills.
உஷ்ண காலத்திலே ஆறு உலருகிறது.	The river is dry in the hot season.
இங்கே யிருந்து அந்தக் கிராமத்துக்கு சாலை உண்டா?	Is there any road to that village from here?
அது போட்ட சாலையா?	Is it a made road?
ஆம், போட்ட சாலை.	Yes, it is a made road.
இந்தக் காலத்தில் அந்த வழி கெட்டதாய் இருக்கிறதா?	Is it very bad at this season?
அதிலே நிசமாய் மெத்த சேறு இருக்கிறது.	There is certainly a great deal of mud in it.
பல இடங்களிலே தண்ணீரும் உண்டு.	And water too in several places.
அதுகள் பரவாய் இல்லை. வண்டிகள் இப்போ போகிறதா?	That is nothing. Do carts pass along it now?
அதுகள் போகக் கூடும்.	They can go.
ஆனால், இப்போது மெத்த வர்த்தகம் இல்லை.	But there is no great traffic at this time.
அதை மராமத்து பண்ணி எவ்வளவு காலம் ஆச்சுது?	How long is it since it was repaired?
உன் ஆளுகள் அதை மராமத்து பண்ணினார்களா?	Did your party repair it?
உன் ஆளுகளைக் கூட்டு.	Collect your party together.
சாமான்கள் எல்லாம் சேர்த்து வை.	Collect all the tools.
ஒரு சக்கரக் கைவண்டியிலே கோடாலிகளைப் போடு.	Lay the pickaxes in the barrow.
இரண்டாம் கொடிக்குக் கிட்ட தள்ளிக் கொண்டுபோ.	Wheel it along to the second flag.
இந்த மூங்கிலைச் சாத்திவை.	Leave this bamboo standing.
இது அடையாளமாய் வேண்டியிருக்கிறது.	This is required as a mark.
என்னோடு வா.	Come with me.

இங்கே, நீ மண்ணினாலே வேலி பண்ணவேண்டும்.	Here, you are to make an earthen fence.
நேற்று உனக்கு நான் காண்பித்தபடி பண்ணப் பட்டிருக்கும்.	It will be made as I described to you yesterday.
என் அடையாளங்களை உனக்கு லாசுக்காரன் காட்டினானா?	Did the lascar show you my marks?
இரண்டு கொனையின் அடையாளங்களிலே ஒரு கொடியை நட்டுவை.	Set up a flag on the two extreme marks.
தூரத்திலே இருக்கிற கொடி நட்டு இருக்கிறதா?	Is the further flag up?
அது சரியாய் இருக்கிறது.	That is right.
முதலிலே வழக்கப்படி இந்த அடையாளங்களுக்கு நடுவே தரையிலே ஒரு கோடு கிழி.	In the first place, cut a score on the ground between these marks in the ordinary fashion.
அந்த முளைக்குக் கயிறு கட்டு.	Attach the cord to that peg.
இப்பொழுது, அதை பிகுவாய் இழு.	Now, draw it tight.
பத்திரம், கயிற்றை அறுக்காதே.	Take care don't cut the cord.
அதை எடு.	Take it up.
என் ஏற்பாடு எங்கே?	Where is my sketch?
இப்போது உன் கையில் கொடுத்த அந்தச் சின்ன காகிதத் துண்டு.	The little piece of paper which I gave into your hand just now?
ஆம், அதுதான்.	Yes, that is (it).
இப்போது பார், அடியிலே நாலு அடி அகலம்.	Now look, four feet broad at bottom.
எனக்கு அளவு கோல் கொடு.	Give me the measuring rod.
எந்தக் கோல், ஐயா?	Which rod, Sir?
எந்தக் கோலாவது, பத்தடி கோலாவது ஆறடி கோலாவது.	Any rod, the 10-feet or the 6-feet rod.
உன் பையன் கையில் இருக்கிறது என்ன?	What is that in your boy's hand?
காளா, ஓடிப்போய் பத்தடி கோல் கொண்டா.	Run, Kâlâ, bring the 10-feet rod.
அதோ ஒரு சக்கரக் கை வண்டி மேல் இருக்கிறது.	Yonder it is on the top of the wheel-barrow.
அது அளவு நாடா அல்லவா?	Is not that the measuring tape?
ஐயா, அது அளவு நாடாதான். நான் சுத்தமாய் மறந்து போனேன்.	It is, Sir, the measuring tape. I had quite forgotten.
இது போதும், அவனைத் திரும்பி வரச் சொல்லு.	This will do well, call him back.
நீ அவனைக் கூப்பிட்டதில்லையா?	Did not you call him?
அந்த நாடாவை வெளியே இழு.	Draw out the tape.

நாலடி தூரத்தில் ஒரு சின்ன ஆப்பு அடி.	At four feet put in a small peg.
அது தளர்ந்திருக்கிறது, அதைக் கெட்டியாய் அடி.	That is loose, drive it in firmly.
மறுபடியும் அந்தக் கடைசியிலே நாலடி.	Again at four feet from that end.
உயரம் மூன்று அடி இருக்கிறது.	The height is three feet.
மேல் அகலம் ஒரு அடி.	The breadth at top one foot.
அது இந்தப் பக்கத்தில் ஒன்றரை அடியும், அந்தப் பக்கத்தில் ஒன்றரை அடியும் கொடுக்கும்.	That will give $1\frac{1}{2}$ feet on this side, and $1\frac{1}{2}$ feet on that.
ஒன்றரை அடி அள.	Measure a foot and a half.
இங்கேயும்.	And here also.
இப்போது, இது சரியாய் ஒரு அடி இருக்குதா ?	Now, is this just one foot?
சரியாய் ஒரு அடி.	Exactly one foot.
இங்கே ஒரு மூங்கில் நடு.	Set a bamboo here.
இங்கேயும் ஒன்று.	And another here.
ஐயா, சிலமூங்கில் இருக்கும், அதுகளை நாங்கள் பிளக்கட்டுமா ?	Sir, there will be too few bamboos, shall we split them ?
பின்பு போதும்.	There will then be enough.
ஆம், அதுகளை பிள; மெல்லிசு துண்டுகள் இந்த வேலைக்கு உதவும்.	Yes, split them; thin pieces will answer for this purpose.
பின்பு போதும்.	There will then be enough.
அந்த முளையிலே கயிறு கட்டு.	Attach the string to that peg.
இங்கே இப்போ அதை இந்த மூங்கிலுக்குக் கட்டு.	Now tie it here to this bamboo.
உயரம் மூன்றடி, நினைப்புவை.	Height three feet, recollect.
அதை பிகுவாய் இழு.	Stretch it tight.
மூங்கிலை நிமிர்த்திப் பிடி.	Keep the bamboo quite upright.
மறுபடியும் அதை இந்த மூங்கிலுக்குக் கட்டு.	Again attach it to this bamboo.
இப்போ அதை மற்றொரு முளைக்குக் கட்டு	And now fasten it to the other peg.
அவ்வளவுதான். இந்த வேலி இந்த மாதிரியாயிருக்கும்.	That is all. The fence will be of this shape.
இங்கே இருந்து பத்து அடி அள.	Measure ten feet from this place.
மூங்கில்கள் நட்டு அந்த மாதிரியாய் இங்கேயும் கயிற்றைக் கட்டு.	Set up the bamboos and fasten the string here also in the same manner.
அது நேராய் இல்லை, அது நிமிர்த்தி நடு.	That is not straight, set it upright.
மெதுவாய்—ஒடியும்.	Gently, it will break.
இப்போ உனக்குத் தெரியுமா ?	Now you understand ?

இந்த விதமாய் பத்தடி சந்து விட்டு வேலி மாதிரியாய் நடு.	In this manner set up the form of the fence at ten feet intervals.
மண்ணை இரண்டு பக்கங்களிலும் வெட்ட வேண்டும்.	The earth is to be dug from both sides.
ஒவ்வொரு பக்கத்தில் வெளிப்புறத்திலிருந்து அஞ்சடி அள.	Measure five feet from the outer line on each side.
பள்ளம் ஒன்றரை அடி ஆழம் இருக்கும்.	The excavation will be $1\frac{1}{2}$ feet deep.
இங்கே மாத்திரம், ஒன்றரை அடி.	Only at this place a foot and a half.
இந்தக் கோட்டில் இருந்து வாட்டம் கொண்டுபோ.	From this line carry down a slope.
எனக்குத் தெரியும். இந்தப் பக்கத்தில் வாட்டமாய் இருக்கும்.	I understand. There will be a slope on this side.
நாங்கள் இந்தப் பக்கத்தில் செங்குத்தாய் அதை வெட்டலாமா?	Shall we cut it perpendicular to this side?
ஆம், முழுதும் செங்குத்தாய்.	Yes, quite perpendicular.
நல்லது. எனக்கு இப்போது அது எல்லாம் தெரியும்.	Very good. Now I have understood it all.
ஆள்களை எல்லாம் கூட்டி வேலை துவக்கு.	Collect all the men and start the work.
அவர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரி.	Divide them into two parties.
அங்கே எத்தனை பேர்?	How many are there?
இந்தப் பக்கத்தில் இருபது பேரும் அந்தப் புக்கத்தில் இருபது பேரும் வை.	Place twenty on this side and twenty on that.
ஒவ்வொரு பிரிவுக்கு பத்தடி வெட்டக் கொடு.	Give each a ten-feet portion of excavation.
ஐயா, பத்தடி ஆழமா, பத்தடி நிகளமா?	Sir, ten feet of excavation or ten feet in length?
நிகளத்தில் பத்தடி.	Ten feet in length.
நான் காட்டின படி மண் வேலி போட்டுப், பின்பு கோரைப் புல் போடவேண்டும்.	Having made the earthen fence as I have shown you, you must next cover it with coarse grass.
இங்கே மெத்த கோரைப் புல் உண்டு.	Here is plenty of coarse grass.
ஆம்: ஆனால் இந்த வேலைக்கு அது உதவாது.	Yes: but it is not fit for this purpose.
நீ பார் இது முழுதும் மணல் நிலமாயிருக்கிறது.	You see the soil is quite sandy.
நமக்குக் கோரைப் புல் வேரும் மண்ணுமாய் வேண்டும்.	We must have the roots of the coarse grass, earth and all.

அந்த ஏரியின் எல்லாப் பக்கங்களில் பெரிய வேல மரத்துக்குக் கிட்ட நல்ல நிலமும் புல்லும் இருக்கிறது.	There is good grass and good soil on all sides of that tank near the large *acacia* tree.
பெரிய புல் பத்தைகள் வெட்டி அப்படியே போடு.	Dig large sods and lay them on entire.
ஒரு அடி நிகளமும் ஒரு அடி அகலமும் இருக்கப் புல் பத்தைகள் வெட்டு.	Cut the sods a foot long and a foot broad.
இந்தக் களிமண் கட்டிகள் என்னத்துக்கு உதவும்?	What are these lumps of clay to be used for?
இந்த நிலம் செங்கல் பண்ண உதவுமா?	Is this soil fit for brick-making?
இல்லை, அது மெத்த உறுதியாயும் களிப்பாயும் இருக்கிறது.	No, it is very stiff and fat.
அதனால் உதவுகிறது அல்லவா?	And is that not preferable?
இல்லை, ஏனென்றால், அந்தச் செங்கல் காயும்பொழுது வெடிக்கிறது.	No, for in drying the brick cracks.
அந்த நிலம் மெத்த களிப்பாய் இருக்கும்போது, நாம் அதிலே மணல் கலப்போம்.	When the soil is very fat, we mix sand with it.
செங்கல்லுகள் தரைக்கு ஒட்டுகிறது இல்லையா?	Do the bricks not adhere to the ground?
நாங்கள் சாம்பல் தரையில் தூவா விட்டால் அதுகள் ஒட்டும்.	They would if we did not spread ashes on the ground.
அச்சிலும் அதுகள் ஒட்டாதா?	And do they stick to the mould too?
அடியிலே நாங்கள் தண்ணீர் நன்றாய் தெளிக்கிறோம், பின்பு இது ஒட்டாது.	We sprinkle the inside well with water, then this does not occur.
என்ன சாம்பல்?	What kind of ashes?
சூளைகளில் இருந்து வந்த சாம்பல்.	Ashes from the kilns.
இந்தச் செங்கல் சுவர் சூளையில் சுட்டதா, மூலைசூளையில் சுட்டதா?	Are these bricks burnt in a walled kiln or in a clamp?
இது தமிழர் சூளையில் சுட்ட கல்.	These are from the native kiln.
பச்சைச் செங்கல்லுகள் எங்கே?	Where are the unburnt bricks?
அதோ, அச்சு இருக்கிற நிலத்திலே.	Yonder, on the moulding ground.
நீங்கள் தரையில் அல்லது செங்கல் மேடையில் கல் அறுக்கிறீர்களா?	Do you mould on the ground or on the brick terrace?
மேடை மெத்த சுத்தியாயும் வழு வழுப்பாயும் இருக்கிறது; அதின் மேலும் சாம்பல் தூவுகிறது உண்டா?	The terrace is very clean and smooth; do you spread ashes on it too?

ஒரு நாளைக்கு எத்தனைச் செங்கல்லுகள் அறுக்கிறது உண்டு?	How many bricks do you mould in a day?
தொள்ளாயிரம்.	Nine hundred.
அதிலும் அதிகமாய் செய்யக் கூடுமா?	Can you make more than that?
அதிலும் அதிகமாய் செய்யக் கூடும், ஆனால் இப்போது தொள்ளாயிரம் செய்யக் கட்டளை உண்டு.	We can make more, but just now the order is nine hundred.
நீங்கள் தொள்ளாயிரம் செய்யாவிட்டால்?	And if you don't make nine hundred?
பின்பு, மற்றவர்களோடு சாயந்திரத்தில் எங்களை விடுகிறதில்லை.	Then we are not dismissed in the evening with the others.
நாங்கள் தொள்ளாயிரம் செய்கிறவரையில் நிலையாய் வேலை செய்கிறோம்.	We work on steadily till nine hundred are made.
ஆனால் இருட்டின பின்பு வேலை செய்யக் கூடாதே?	But you cannot work when it becomes dark?
வேலை முடியாவிட்டால், எங்களுக்குச் சரியான கூலி இல்லை.	If the task is not completed, we don't get our full pay.
இந்தச் செங்கல் காய எத்தனை நாள் பிடிக்கும்?	How many days do the bricks take to dry?
இந்தக் காலத்தில் நாலு அஞ்சு நாள் (வேண்டும்.)	Four or five days at this season.
இந்தச் செங்கல் சூளைக்கு எத்தனை நாளைக் குள்ளே தயாராகும்?	In how many days are the bricks ready for the kiln?
இந்தக் காலத்திலே வழக்கமாய் நாலு அஞ்சு நாளிலே (தயாராகும்).	In four or five days usually at this season.
அதுக்குள்ளே நன்றாய் காயும்.	In that time they dry well.
மந்தாரமாய் இருந்தால் மெதுவாய் காயும்.	If there be many clouds they dry slowly.
அதுகள் வேகும்போது மெத்த சுருங்குகிறதா?	Do they shrink much in baking?
இல்லை, மெத்த கொஞ்சம்.	No, very little.
இந்தச் சூளைகளுக்கு என்ன கட்டை போடுகிறது?	What kind of wood is used in these kilns?
எல்லா தாழ்ந்த மரங்களும்.	All kinds of inferior wood.
இந்தக் கட்டை எல்லாம் எங்கேயிருந்து சூளைகளுக்கு வருகிறது?	Where does all this wood for the kilns come from?
மலைக்கு நேராக பத்து கோசு தூரத்தில் இருக்கிற காட்டிலிருந்து (வருகிறது).	From the forest, about ten coss off, towards the hills.
அவர்கள் சூளை போட இந்த பெரிய மரத் துண்டுகளை எப்படி வெட்டுகிறார்கள்?	How do they cut up these large pieces of wood for the kiln?

அவர்கள் வெடி மருந்தினாலே அதுகளைப் பிளக்கிறார்கள்.	They split them with gunpowder.
அவர்கள் இந்தச் சூளையில் செங்கல் எப்படி அடுக்குகிறார்கள்?	How do they arrange the bricks in this kiln?
அடிக்கல் கொஞ்சம் சந்துவிட்டு ஒருக்களித்து வைக்கிறார்கள்; மேல் வரிசையில் நெருக்கமாய்ப் படுக்க வைக்கிறார்கள்.	The lower bricks they place on edge, at little intervals; in the upper layers they lay them flat, and close together.
இந்தச் செங்கல்லுகள் வேகாததால், மஞ்சளாயிருக்கிறது.	These bricks are underburned, they are quite yellow.
ஆம், அது வேகாத இரண்டாந்தரக் கல்லுகள்; இது முதல் தரக் கல்லுகள்.	Yes, those are of the second quality; the first class bricks are these.
இது மெத்த உறுதியாயும் நல்லதாயும் இருக்கிறது.	These are very hard and good.
அதுகள் நல்ல சிவந்த நிறமாய் இருக்கிறதுகள்.	They have a fine red colour.
உன் கொம்பினால் மேல் கல்லுகளைக் கொஞ்சம் தட்டு.	Strike the upper bricks a little with your stick.
இந்தச் சத்தம் நல்ல செங்கல் என்று காட்டுகிறது.	This sound shows the brick to be good.
இந்தப் போரிலே மெத்த கல்லுகள் அந்தச் சத்தம் இல்லை.	No such sound is emitted by the others in this stock.
இந்தச் சூளையிலே மெத்த கொஞ்சம் சொறியாங்கல் உண்டு.	In this kind of kiln there is very little vitrified brick.
ஆனால், இதுகள் மெத்த முறுக்காயிருக்கின்றன.	But these are much distorted.
அது தமிழர் சூளையிலே வேகப்பட்டது.	Those were burned in the native kiln.
தமிழர் சூளைக்கு என்ன கட்டை போடுகிறார்கள்?	What kind of fuel do they use in the native kiln?
அதற்கு எருவும் மற்ற எல்லாச் செத்தைகளும் போடுகிறார்கள்.	They use manure and litter of all sorts.
இது என்னத்துக்கு உதவும்?	Of what use is this?
இது ஆர் வேலை?	Whose duty is this?
இது அல்லாமல் வேறே உனக்கு வேலை உண்டா?	Have you any work besides this?
இது எப்போதும் உன் தொழிலா?	Has this always been your employment?
இது என்ன செங்கல்லுகள்?	What bricks are these?
இந்தக் கல் எந்திரத்தினாலே செய்யப்பட்டது.	These bricks are made by the machine.
அது மெத்த பருமனான கல்லுகள்.	They are very thick bricks.
அதிலே கொஞ்சம் பிரயோசனம் உண்டு.	There is some advantage in that.

அந்தக் கல்லிலும் இந்தக் கல் கொஞ்சம் ஒடியும்.	Fewer of these will break than of the other bricks.
ஒடிந்தச் செங்கல் என்னத்துக்காக உதவும்?	Of what use are the broken bricks?
அதுகள் சாலைகளுக்காக உதவும்.	They come into use for the roads.
எந்திரத்தில் அரைக்கிறார்களா?	Do they grind them in a mill?
இல்லை, சின்ன கொட்டாப் புளியினால் தூளாக்குகிறார்கள்.	No, they pound them with small mallets.
கொட்டாப்புளிகளில் ஒன்றை நான் பார்க்கட்டும்.	Let me see one of the mallets.
இரண்டு முனைகளிலும் பெரிய இரும்பு ஆணிகள் இருக்கிறது.	There are large iron nails at both ends.
இதுவும் அல்லாமல் இரும்பு வளையம் (இருக்கிறது).	And an iron ring besides.
இந்தக் கொட்டாப்புளி மெத்த நல்லது அல்ல.	This mallet is not very good.
இது சலிக்கிற சல்லடை.	This is the screen for sifting.
அதுகள் சிலவேளை மூங்கிலினால் முடையப்பட்டு இருக்கிறது, ஆனால் சாதாரணமாய் இதைப் போல இரும்பு கம்பியினாலே பண்ணப்பட்டு இருக்கிறது.	They are sometimes made of bamboo, but generally, like this, of iron wire.
ஒரு மனிதன் ஒரு நாளையிலே எவ்வளவு செம்மண் தயார் பண்ணுகிறான்?	How much pounded brick does one man prepare in a day?
இரண்டு மரக்கால் சலித்தது.	Two measures sifted.
செங்கல் பண்ண தண்ணீர் எங்கே கிடைக்கிறது?	Where is the water obtained for brick-making?
கொஞ்சம் குளத்தில் இருந்து, கொஞ்சம் கிணறுகளில் இருந்து (கிடைக்கிறது).	Some from a tank, some from wells.
அச்சு மேடைக்குத் தண்ணீர் எவ்வளவு தூரம் இருக்கிறது?	How far is the water from the moulding-terrace?
கிணற்றுக்கும் அச்சு நிலத்துக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது?	What distance is there between the moulding ground and the well?
எண்பது அல்லது நூறு அடிகளுக்கு மேலே இல்லை.	Eighty or a hundred feet, not more.
தண்ணீர் கிணற்றில் இருந்து எப்படி மொள்ளுகிறது?	How is the water drawn from the well?
தோல் தோண்டியினாலே.	By means of a leathern bucket.
இந்தத் தோல் தோண்டி இந்த வேலைக்கு மெத்த சின்னது.	This bucket is very small for this work.
மெத்த பெரியதும் இருக்க இல்லையா?	Is there not a larger one too?
ஒன்று இருக்கிறது, ஆனால் அது இப்போ மராமத்து ஆகிறது.	There is one, but it is now being mended.

இங்கே ராட்டணமும் இருக்கிறதா?	Is the wheel also used here?
ஆம், மற்றொரு கிணற்றில் இருக்கிறது.	Yes, in that other well there is one.
இந்தக் கிணற்றுக்கு வேறொரு ராட்டணம் கொண்டா.	Bring another wheel for this well.
அது இங்கே வேலை செய்ய உதவமாட்டாது, இதற்கு இரண்டாவது கப்பி வேண்டியிருக்கிறது.	It cannot be worked here, it requires a second pulley.
மற்றொரு அச்சு நிலத்திலே சாதாரணமாய் தோண்டி உதவுகிறது?	At the other moulding ground the common pot is used?
ஆம், அங்கே தண்ணீர் மேல் மட்டத்துக்கு மெத்த தூரம் அல்ல.	Yes, the water is not very far from the surface there.
கிணறு ஆழமாய் இருக்கும் போது, வழக்கமான தோண்டி கூடாது.	When the well is deep, the common pot will not answer.
இந்தக் கிணறு எவ்வளவு ஆழம்?	How deep is this well?
அந்தக் கயிறு அளந்தால், பின்பு தெரியும்.	Measure the rope, it will be known from that.
இது அவன் சொந்த வேலைக்காகப் பித்தளைத் தோண்டியும் கயிறும் இருக்கிறது.	This is his brass water-pot and cord for his own use.
மண் தோண்டியிலே தண்ணீர் ஏன் கொண்டு போகிறாய்?	Why do you take away the water in the earthen vessel?
கூப்பிட்டு, அவனைத் தோல் தோண்டி கொண்டுவரச்சொல்லு.	Call him, tell him to bring his water-skin.
அவர்கள் களிமண்ணை செங்கல்லுக்கு தயார்பண்ண பக்காளியிலே தண்ணீர் கொண்டு போகிறார்கள்.	They take the water in pakals for preparing the brick clay.
களிமண் எங்கே கூட்டுகிறது?	Where is the clay prepared?
அதோ அஸ்திவாரம் தோண்டுதலுக்கு பக்கத்திலே.	Yonder, at the side of the excavation.
தண்ணீர் வைக்கப் பெரிய சாலு இல்லையா?	Have you no large open water vessel for keeping the water in?
இல்லை, தண்ணீர் சாலிலே வைக்கப்பட்டிருக்கிறது.	No, the water is kept in a bucket.
அந்தக் களிமண் தொட்டிகளின் கிட்ட குளமும் இருக்கிறது.	There is a tank, too, alongside of the clay troughs.
இந்த ஒரு சக்கரக் கைவண்டியின் தோளின் வார் மெத்த அகலமாய் இருக்கிறது.	The shoulder straps of this hand-barrow are too broad.

ஒரு சக்க்ரக் கைவண்டியை இழுத்துக் கொண்டுபோய் சீக்கிரமாய் இன்னம் கொஞ்சம் களி மண் கொண்டா.	Take up the hand-barrow and bring some more clay quickly.
தோள்மேலே அந்த வாரை வை.	Put the strap over your shoulder.
இந்த வண்டிகள் செங்கல்லுகளை எங்கே கொண்டு போகிறது?	Where are these carts taking bricks to?
அதுகள் புது பார்குச்சுகளுக்கு கொண்டுபோகிறதுகளா?	Are they going to the new barracks?
இல்லை, இந்தச் செங்கல்லுகள் மலைச்சாலையில் சின்ன வாராவதிக்கு இருக்கிறதுகள்.	No, these bricks are for the little bridge on the Mount Road.
பார்குச்சுகளுக்கு செங்கல் சைதாப்பேட்டையிலிருந்து வருகிறது.	The bricks for the barracks come from Saidapet.
இது மெத்த தூரமாயிருக்கிறது; வண்டி ஒரு நாளைக்கு எத்தனை தடவை வருகிறது?	This is a great distance; how many trips do the carts take in a day?
செங்கல்லுகள் அந்தக் கிராமத்திலே குத்தகை பண்ணப்பட்டு இருக்கிறது.	Bricks are made by contract in that village.
சைதாப் பேட்டையில் எத்தனை குத்தகைக்காரர்கள் இருக்கிறார்கள்?	How many contractors are there at Saidapet?
நேற்று சைதாப் பேட்டையிலிருக்கிற நாலு அஞ்சு மனிதர்கள் குத்தகைக்காக விண்ணப்பம் பண்ணினார்கள்.	Yesterday, four or five men of Saidapet made application for contracts.
அண்டையிலே பத்துக் கிராமங்கள் உண்டு, அங்கேயிருந்து செங்கல்லுகள் அகப்படுகிறது.	There are 10 villages in this neighbourhood from which bricks are obtained.
நீர் நேற்றுகாலமே வரச்சொன்ன அந்த மனிதன் இப்போ இங்கே வந்து இருக்கிறான்.	That person is now here whom you told yesterday to come in the morning.
நாம் என்னவேலைக்குப் போவோம்?	What work are we to go to?
சின்ன கால்வாய் தோண்டு தலுக்குப் (போவோம்.)	The excavation of the little canal.
அந்த ஆளுகள் எங்கே?	Where are those men?
அந்தத் தண்டலை என்னிடத்துக்கு அனுப்பு.	Send the Tindal to me.
இங்கே வா, நான் உன் வேலை காட்டுவேன்.	Come here, and I will point out your work.
உன் மண்வெட்டி எங்கே?	Where is your hoe?
அந்தச் சீர்மை கோடாலி எடு.	Lift up that pickaxe.
நான் உன்னைக்கூப்பிட்டதில்லை.	I did not call you.

அந்தச் சின்ன முளைகளை யெல்லாம் கொண்டா.	Bring all the small pegs.
அங்கே எத்தனை இருக்கிறது?	How many are there?
அவன் என்ன சொல்லுகிறான்?	What does he say?
அவன் அந்தக் கொட்டாப்புளி மறந்துபோனான்.	He has forgotten the mallet.
ஆனால் ஓடிப்போய் கொண்டா.	Run and bring it then.
நான் எங்கே இருந்து அதைக் கொண்டு வருவேன்?	Where shall I bring it from?
கிடங்கில் இருந்து, குப்புச்சாமியைக் கேளு.	From the store, ask Cuppusawmi (for it.)
அவனை இரண்டு கொண்டுவரச் சொல்லு. இரண்டு தேவையாயிருக்கும்.	Tell him to bring two. Two will be required.
உனக்குத் தெரியுமா?	You understand?
ஓடிப்போய் பார்.	Run, look sharp.
மெத்த கயிறு இருக்கிறதா?	Have you plenty of string?
ஐயா, இவ்வளவு இருக்கிறது, பார்	So much sir; see.
அது போதும்.	That is quite enough.
உன்னிடத்தில் எத்தனை கூடைகள் இருக்கிறது?	How many baskets have you?
இது பார், ஒன்று உதவாது.	See, this one is useless.
மெய்யாய், இது மெத்த பழசு.	It is a very old one, to be sure.
அப்படிப்பட்டதுகள் கொண்டு வராதே.	Don't bring such things.
அங்கே நல்ல புது கூடைகள் மெத்த இருக்கிறதுகள்.	There are plenty of good baskets, new ones.
இது நினைப்பு இருக்கட்டும்.	Remember this.
இங்கே முளைகளில் ஒன்றை அடித்து, அதுக்குக் கயிறு கட்டு.	Put in one of the pegs here, and fasten the string to it.
அந்த மனிதன் கொட்டாப்புளி இன்னம் கொண்டு வரவில்லை.	That man has not yet come with the mallet.
வேண்டியது இல்லை, நீ இந்த மண்வெட்டியினால் இதை அடிக்கக் கூடும்.	Never mind, you can drive in this one with the hoe.
அதிலே மெத்த வருத்தம் இல்லை என்று தோன்றுகிறது.	I suppose there is no great difficulty in that.
அதை ஒரு அடி அடி.	Give it a blow.
அது போதும்.	That will do.
இப்போ இந்தப் பக்கம் கயிற்றை யிழுத்து, இங்கே இரண்டாவது முளைக்குக் கட்டு.	Now draw the string in this direction, put in a second peg here.
அவனுக்கு உதவி செய்.	Help him.
இதோ அவன் வருகிறான்.	Here he comes.
ஆர் வருகிறார்? நல்லது, இப்போ கொட்டாப்புளி எடுத்துக்கொண்டு கூடவா.	Who comes? Very good, now take the mallet and come along.

அந்தக் கயிற்றை கெட்டியாய் இழு.	Stretch the cord tight.
இந்தக் கோட்டுக்கு நேராய் அடையாளம் போட, இப்போ இரண்டு ஆளுகளை வை.	Now put on two men to cut a mark along this line.
அப்படித்தான், தெளிவாய் செய்; பின்பு மெத்த ஆழம் அது வெட்டப் பட்டிருக்கும்.	That is the way, make it distinct; it will be cut deeper afterwards.
இது என்ன? அந்த முனையிலே இந்தக் கயிற்றைத் தளர்த்தினது ஆர்?	What is this? Who has loosened the string at that end?
இந்த மனிதன் அதை மண் வெட்டியினாலே வெட்டினான்.	This man has cut it with his hoe.
பத்திரமாயிரு, கயிற்றுக்கு அப்புறம் மண் வெட்டியினாலே வெட்டு, கயிற்றை அறுக்கமாட்டாய்.	Be careful, apply the hoe outside the string, and you will not cut it.
அதிலே ஒரு முடி போட்டு மறுபடியும் அதை கெட்டியாய் இழு.	Tie a knot upon it and pull it tight again.
அவ்வளவு அழுத்தமாய் அல்ல, நீ அந்த முளையை வெளியே இழுத்து விடுகிறாய்.	Not so tight, you are pulling out that peg.
இப்போது இந்தப் பக்கத்தில் அதேமாதிரியாய் வேறொரு கயிற்றைக் கட்டு.	Now stretch another cord in the same manner on this side.
அது எல்லாம் தயாராய் இருக்கிறதா?	Is that all ready?
கயிறுகளின் மத்தியில் அகலம் இரண்டு முனைகளிலும் சரியா இருக்கிறதா இப்போ பார்.	Now see that the distance between the cords is the same at both ends.
பத்தடி கோல் நான் பார்த்தது இல்லை, உன்னிடத்தில் ஒன்று இருக்கிறதா?	I have not seen any ten-feet rod, have you one?
ஆம் ஐயா, இரண்டு உண்டு. ஆ! விஜயா, அந்த பத்தடி கோல் தூக்கி இங்கே கொண்டா.	Yes, sir, there are two. Ho! Vijaya, take up that ten-feet rod and bring it here.
அதை இங்கே வை: அது கயிற்றில் படுகிறதா? வலது பக்கத்தில் இன்னம் கொஞ்சம் அதிகம், அது நேராய் இல்லை.	Lay it down here: is it touching the cord? A little more to the right, that is not straight.
அது இப்போ சரியாய் இருக்கிறது.	That is now right.
இல்லை, அதை யின்னம் எடுக்காதே; மற்றொன்றைகீழேவை— பின்னும் பதினெட்டு அடி— இங்கே ஒரு முளை அடி.	No, don't take it up yet; put the other one down also—eighteen feet—put a peg in here.
போய் அந்த முனையிலே அப்படிச் செய், உனக்குத் தெரியுமா?	Go and do the same at the other end, you understand?

இப்போ இந்த ஆள்கள் எல்லாம் வெட்டத் துவக்கலாம்; நீ என்னோடு கூட வந்து மற்ற வேலையை அள.	Now all these men may begin digging; come you with me and measure the rest of the work.
உன்னிடத்தில் எத்தனை ஆள்கள் இருந்தார்கள் என்று சொன்னாய்?	How many men did you say you had?
அவர்களில் பன்னிரண்டு பேரை இங்கே வேலைக்கு வை.	Set twelve of them to work here.
அவர்கள் வெட்டும்போது கோட்டுக்குச் சரியாய் இருக்கவும் இரண்டாவது கோட்டுக்கு வெளியே மண்ணை எல்லாம் போடவும் அவர்களுக்குக் காட்டு.	Point out to them that they must keep exactly to the line in digging, and throw all the earth beyond this second line.
நாங்கள் வாட்டமாய் இதை வெட்ட வேண்டுமோ?	Are we to cut this with a slope?
இல்லை, செங்குத்தாய் பண்ணு, வாட்டம் மற்றக் கோட்டிலிருந்து பின்பு வெட்டப்படும்.	No, make it a perpendicular; the slope will afterwards be cut from this other line.
இப்போ கொஞ்சம் வாட்டம் வெட்டுதல் மெத்த நல்லது; ஆள்கள் கூடைகளோடு ஏற மெத்த சுளுவாய் இருக்கும்.	You had better cut a part of the slope now, and it will be more easy for the men to ascend with the baskets.
இங்கே பார்; சமம் இருக்கிற இடத்தில், ஒரு சக்கரக் கைவண்டிகள் கொண்டுபோ. அந்த வேலை மெத்த சீக்கிரமாய் நடக்கும்.	And look here; where it is level, use wheel-barrows. The work will be done much faster.
இந்த இடத்திலே இரண்டு பலகைகள் போட்டு, அதுகளின் மேலே அந்த ஆள்களை எல்லாம் போகச் சொல்லு.	Lay two planks at this place and make them all go along the planks.
உன்னிடத்தில் ஒரு சக்கரக் கைவண்டிகள் இல்லையா?	Have you got no wheel-barrows?
இரண்டு மாத்திரம், அதுகள் இங்கே இருக்கிறது.	Only two. Here they are.
அப்படியானால், பார்த்தசாரதி ஆள்கள் இடத்தில் இருந்து இன்னம் ஆறு கொண்டு வா. அவர்களுக்கு இப்போது அதுகள் வேண்டியது இல்லை.	Go then and bring six more from Partasaradi's party. They are not using them at present.
அதோ வரம்பின் ஓரத்திலே அதுகள் இருக்கிறது பார்.	There they are, look, on the edge of the embankment.
ஐயா நமக்கு பலகைகளும் தேவையிருக்கிறது; இங்கே ஒன்றும் இல்லை.	Sir, we require planks too; there are none here.

என்னோடு இரண்டு ஆள்கள் வரட்டும். இப்போ கிடங்குக்குப் போகிறேன், அவர்களுக்கு அதுகளை எடுத்துக் கொடுப்பேன்.	Let two men come along with me, I am going to the store now, and will give them out.
ஆ, கேளு! நான் மறந்து போனேன். பார்த்தசாரதி இடத்தில் ஒரு சக்கரக் கைவண்டிகள் எத்தனை இருக்கிறதோ அத்தனை பலகைகளும் உண்டு. இன்னம் இரண்டு ஆள்களை அனுப்பி பலகைகளைக் கொண்டுவர அவர்களுக்குச் சொல்லு.	Oh, hear! I forgot. Partasaradi has got planks too as well as wheel-barrows. Send off two more men and bid them bring the planks.
இதுகள் என்ன மண்வெட்டிகள்; காம்புகள் இல்லை?	What hoes are these without handles?
இன்று காலமே ஆறு காம்புகளும் ஒடிந்து போச்சுது. சற்று இந்த இடத்திலே தரை மெத்த கெட்டியாய் இருக்கிறது.	All six handles were broken this morning. Just at this place the ground is very hard.
ஆனால், இப்படிப்பட்ட வேலைக்கு ஏன் சீர்மை கோடாலிகளை உபயோகப் படுத்துகிறது இல்லை? அப்படிச் செய்ய உனக்கு முன்னமே சொன்னேன்.	Why then don't you use pick-axes for such work? I told you before to do so.
ஐயா, அந்த வெட்டுதல் இப்போ முடிந்தது; என் ஆள்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். வேறே வேலை என்ன இருக்கிறது? எங்களுக்கு என்ன உத்திரவு?	That digging is now finished, Sir; my party is unemployed. What other work will there be? What order is there for us?
இப்போ உன்னிடத்தில் எத்தனை ஆள்கள் இருக்கிறார்கள்?	How many men have you got now?
ஐயா இருபத்தாறு, ஒருவன் ஆசுபத்திரியில் நோவாயிருக்கிறான். மொத்தம் இருபத்தேழு.	Twenty-six, Sir, and one sick in hospital. In all twenty-seven.
இப்போ மழை பெய்தபடியால், நாம் சாலைகளிலே வேலை ஆரம்பிக்கவேண்டும். எத்தனை வண்டி பருக்கைக்கல் கொட்டி இருக்கிறது?	Now that rain has fallen we must begin work upon the roads. How many cart-loads of gravel have been laid down?
ஐயா, எனக்குத் தெரியாது. கேட்கட்டா?	I don't know, Sir; shall I ask?
குமஸ்தா முப்பத்தெட்டு என்று சொல்லுகிறான்.	The writer says thirty-eight.

நல்லது, அது இப்போ போதும், ஆனால் தரை அந்த இடத்திலே மெத்த மணலாயிருக்கிறது. நாம் முதலாவது ஒடிந்த செங்கல் பரப்ப வேண்டும்.	Well, that is enough at present. But the ground is very sandy at that place. We must first lay down a layer of broken bricks.
சாலையின் பக்கத்திலே மெத்த கல்லுகள், முன்னமே கொட்டி யிருக்கிறது பார், இன்னம் கொண்டுவந்து போடச் சொன்னேன்.	You will see there is a large quantity already laid along-side of the road, and I have ordered more to be thrown there.
வேலை எல்லாம் ஆனபின்பு பழைய சாலை முனையில் இருந்து ஆள்களின் குடிசைகளின் சாலைக்குத் திரும்பு மட்டும் ரஸ்தாவின் மணற்பாங்குஎல்லாம் கொஞ்சம் களிப்பான களிமண் பரப்ப வேண்டும்.	When that is all expended you, must lay down some stiff clay on all the sandy part of the road, from the end of the old kunkurred part to the turn of the road at the men's huts.
ஐயா, நாங்கள் களிமண் எங்கேயிருந்து வெட்டலாம்?	Where shall we dig the clay from, Sir?
பெரிய ஆலமரத்துக்குக் கிட்ட அந்த ஏரியிலே இருந்து வெட்டலாம்.	From that same tank near the large banyan tree.
நல்லது ஐயா, இப்போ என் ஆள்களைக் கொண்டு வரட்டுமா?	Very good, Sir; shall I bring my party now?
ஆம், இப்போ அவர்களைக் கொண்டா. வண்டிகளுக்கு உத்திரவு கொடுப்பேன்.	Yes, bring them now. I will give the order for the carts.
உனக்கு வேண்டிய ஆயுதங்கள் எல்லாம் இருக்கிறதா?	Have you got all the tools you require?
திமிசுக் கட்டைகள் எங்கே?	Where are the rammers?
ஐயா, இன்னம் அதுகள் பெற்றுக் கொள்ள வில்லை.	They have not yet been received, Sir.
என்ன—கிடங்கிலிருந்து நேற்று சாயந்திரம் அதுகளைப் பெற்றுக் கொள்ள இல்லையா?	What—did you not receive them yesterday evening from the store?
இல்லை, கிடங்கு மூடப்பட்டது, சாயந்திரம் வந்து விட்டேன்.	No, the store was closed, evening had come on.
அப்படியானால், நான் உனக்கு கொடுத்த ரசீது நீ கொண்டு போகஇல்லையா?	Then did you not take my receipt there at the time I gave it to you?
என் தப்பு, நான் அப்போது அங்கே போக இல்லை.	There I was in fault, I did not go at that time.
இப்போ என்ன தொந்திரவு, உனக்குக்கொடுத்த உத்திரவுக்கு கீழ்ப்படியாத படியினாலே வேலை எப்படி தடை யாச்சுது நீ பார். நாலு அஞ்சு ஆள்களைச்	You see now what inconvenience you cause, and how the work is impeded by your not attending to your orders. Take four or five men now off

சீக்கிரமாய் இட்டுக்கொண்டு போய் திமிசுக் கட்டைகளை எடுத்துக்கொண்டு வந்து வேலைக்குப் போ.	the work, and go quickly for the rammers.
அதுகள் இங்கே இருக்கிறது, எல்லாம் நாலு.	They are here, all four.
அவர்கள் இரண்டு மாடும் பக்காளிகளும் கொண்டு வந்தார்கள்; தண்ணீர் தூரமாய் இருக்கிறது.	They have brought two bullocks and puckals. The water is distant.
நல்லது, அது சரி.	Very well, that is right.
அந்த குமஸ்தாவைக் கூப்பிடு, வண்டிகளுக்காக நேற்று ஆருக்கு உத்திரவு பண்ணினேன்.	Call that writer to whom I gave the order yesterday about the carts.
வண்டி நமக்கு கிடைக்குமா, கிடைக்காதா என்று விசாரிக்க ஆரையாவது அனுப்பினுயா?	Have you sent any one to enquire whether we can get the carts or not?
ஆம் ஐயா, நேற்று அனுப்பினேன்; நம்மிடத்திலேயே வண்டிகள் இருக்கிறது, ஆனால் நீர் சொன்ன அத்தனையும் நல்லதும் பலமுமான வண்டிகள் இல்லை.	Yes, Sir, I sent yesterday; we have got carts certainly, but not good ones, not strong, nor so many as you ordered.
ஆனால், உன் இடத்தில் எத்தனை வண்டிகள் உண்டு?	But how many carts have you?
என்னிடத்தில் நாலு தான் உண்டு.	I have only four.
இதுக்கு மேலே கிடைக்காவிட்டால், இதுகள் எல்லாம் புல் கொண்டு வர இருக்க வேண்டும். இந்த மழை பெய்யும் போது இப்போ மராமத்து பண்ணின வாய்க்காலின் கரைகளிலும் வேலை செய்யும் கடை பக்கத்து நீண்ட வாட்டத்திலும் புல் போடவேண்டும்.	If no more can be had, these must all be employed in bringing grass; grass must be put upon the canal banks which have just been repaired, also on the long slope below the workshop, whilst this rain continues.
புல் வெட்ட உனக்குக் காட்டின இரண்டு இடங்களுக்கு உன் ஆளைக்கொண்டு போய் பெரிய புல் பத்தைகள் வெட்டச் சொல்லு, வேரும் மண்ணுமாய் எடுக்க பத்திரமாய் இரு.	Take your party to the two places I shewed you to dig the grass; make them dig large sods, and be sure they take up roots and all.
ஆள்களை எல்லாம் நான் கொண்டு போகட்டா?	Shall I take the whole party?
ஆம் அவர்களை எல்லாம் கொண்டுபோ, இந்த வேலைக்கு வேறு ஆளை வைக்கிறேன்.	Yes, take them all; I will set another party on the work here.
அந்த குமஸ்தா எங்கே?	Where is that writer?

இங்கேவா, கிஷ்ணனையும் அவன் இருபது ஆளுகளையும் இந்தவேலையில் வைத்து; நல்ல புல்லு தவிர, மற்றொரு பூண்டுகள் கலக்கக் கூடாது என்று நினைப்பு பண்ணு.	Come here, put Krishnan and his twenty men upon this work; remind him to let nothing but good grass be put down, to let no other wild plants be mixed with it.
கல் தச்சு வேலையில் இருந்து நேற்றுத் தள்ளப்பட்ட மூன்று பேரும் மழை பெய்யாத காலத்திலே புல்லுக்குத் தண்ணீர் வார்ப்பார்கள்.	The three men discharged yesterday from the mason's work will water the grass when no rain falls.
மழையினாலே சாலைகள் மெத்த கெட்டுப் போச்சுது. அதுகளைப் போய்ப் பார்த்து வேண்டிய மராமத்தை எனக்குச் சொல்லு. சமையம் இருக்கும் போது பார்ப்பேன்; ஆனால், அவசியமான வேலை ஒரேதரமாய் செய்யப்பட்டிருக்க எனக்கு வந்து சொல்லு.	A good deal of damage has been done to the roads by the rains. Go and look at them, and let me know what repairs will be necessary. I also will see them as soon as I have leisure; but let me know what work is very urgent, that it may be done at once.
நல்லது ஐயா, முதலிலே எந்தப் பக்கம் போகட்டும்?	Very good, Sir; in which direction shall I go first?
முதலாவது அடையாற்றின் சாலையே போ. இரண்டு மயில் தூரம் அந்த வழியேபோய், பின்பு கால்வாய்க்குத் தென்மேல் பக்கம் திரும்பு; கரைக்குப்போக்கு இருக்கிறதா என்றும் கரை மேடைகளில் ஏதாவது ஒடிந்து இருக்கிறதா என்றும் பார்.	Go along the Adyar road in the first place. Go about a couple of miles straight along it, then turn westward to the canal; see if the banks have been injured and if any of the *bunds* have been broken.
நல்லது, ஐயா; நான் இப்போ புறப்பட்டுப் போகட்டுமா?	Very good, Sir; shall I start now?
நாளை காலமே வரைக்கும் நீ போக வேண்டியது இல்லை.	You need not start till to-morrow morning.
ஆனால் இப்போ, அடையாற்றின் சாலையைக் குறித்துக் கேட்கட்டும். எவ்வளவு தூரம் போனாய்?	Now then, let me hear first about the Adyar road. How far did you go?
உன் உத்திரவின்படி இரண்டு மயில் தூரம் போனேன்.	I went a couple of miles according to your order.
சாலை எப்படி இருக்கிறது எனக்குச் சொல்லு?	Tell me what is the state of the road?
பல இடங்களிலே அறுக்கப் பட்டிருக்கிறது. சாலை சமமாய் இல்லை.	In several places it is cut right across. The road is not level.

எந்த பக்கத்திலே வாட்டம் மெத்த இருக்கிறது?	To which side does it slope most?
வலது பக்கம், அது என்னவென்றால் வடபுறம்; ஆகையினாலே அந்தப் பக்கத்திலே தண்ணீர் ஓடுகிறது, மேலும் கொஞ்ச காலத்துக்குள்ளே வாய்க்கால் போலாகிறது.	To the right, to the north side I mean; in consequence of which the water flows to that side, and in a little time it becomes quite like a water-course.
மேல் பக்கத்திலே கால்வாய் இல்லையா?	Is there no ditch on the upper side?
அனேக இடங்களில் இல்லை; அப்படியிருந்தால், மேட்டில் இருந்து வருகிற தண்ணீர் அதிலே விழும்.	In many parts there is not; if there were, the water from the high ground would fall into it.
அது செய்யவேண்டும்.	That must be done.
நாங்கள் ஒரேதரத்தில் சாலையை மராமத்து பண்ணலாமா?	Shall we repair the road at once?
அந்த இடத்திலே வண்டிகள் இடைவிடாமல் போகிறதும் வருகிறதுமாய் இருக்கிறது; வாய்க்கால் பின்பு செய்யக் கூடும்.	There is a constant passage of carts to and fro at that place; the drain can be made afterwards.
இல்லை, அந்த வாய்க்கால் இல்லாதபடியினாலே சாலை கெட்டுப்போகிறது.	No, the road is destroyed for want of that drain.
முதலாவது அதை வெட்டச்செய், பின்பு மழை பெய்யும்போது சாலை கெட்டுப்போகாது.	Have it dug in the first place, then the road will not be injured in that way when more rain falls.
அப்படி அறுக்கப்பட்டிருக்கிற எல்லா இடங்களிலும் மேல் பக்கத்திலே ஒரு கால்வாய் வெட்ட வேண்டும்.	A ditch must be dug on the upper side at all the parts which have been cut in that manner.
பின்பு அவசியமான இடத்திலே சாலையை மராமத்து பண்ணு; மழைகாலம் போனபிறகு முழுதும் மராமத்து பண்ணப்படும்; தற்காலத்திலே மற்றொன்றும் செய்யக் கூடாது.	Then mend the road where very necessary; it will be thoroughly repaired after the rains; nothing else can be done at present.
நல்லது, ஐயா; அந்தச் சாலையிலே வேலைசெய்ய நான் பிரவேசிக்கட்டுமா?	Very well, Sir; now shall I go on ahead upon that same road?
வாராவதிகள் எல்லாம் நன்றாய் இருக்கிறதோ இல்லையோ என்று நீ இன்னம் எனக்குச் சொல்ல இல்லை.	You have not told me yet whether the bridges are all right.

ஐயா, மறந்துபோனேன்: வாராவதிகள் எல்லாம் நன்றாய் இருக்கிறது; தரை கொஞ்சமாவது இறக்கமாயில்லை; கைப்பிடிச்சுவர்கள் கொஞ்சம் ஒடிந்து இருக்கிறது.	Sir, I forgot: the bridges are all right, that is, the flooring has not sunk in the least: the parapet walls are broken a little.
எப்படி ஒடிந்தது, என்னகாரணத்தினாலே?	In what way broken, from what cause?
எனக்கு இப்படி தோன்றுகிறது, வண்டிக்காரர் தங்கள் வண்டிகளை அந்தப் பக்கத்திலே மெத்த நெருக்கமாய் ஓட்டுகிறார்கள், வண்டி சக்கரம் சுவரில் படும் என்று (அவர்கள்) நினைக்க வில்லை.	It appears to me to be this, that the bandymen drive their carts very close to the side and take no thought of the wheels coming in contact with the wall.
சந்தேகமில்லை, அவர்கள் மெத்த அஜாக்கிரதை உள்ளவர்கள்.	It is so without doubt, they are very careless.
அப்படி அவர்கள் வண்டிகளை ஓட்ட நீ பார்த்தால், அவர்கள் அசட்டையினாலே எவ்வளவு நஷ்டம் ஆச்சுது என்று அவர்களுக்குக் காட்டு.	If you see any of them letting their carts go in that way, show them how much damage they occasion by their negligence.
ஆ, நான் அகத்தியமாய் அவர்களுக்குச்சொல்லுவேன், ஆனால் அந்த மனிதர்கள் பரவா பண்ணுகிறதும் அதைக்குறித்து நினைக்கிறதும் இல்லை.	Oh! I will tell them, certainly; but those people don't mind in the least, they pay no attention.
நாளைக்குச் சாலையை மராமத்து பண்ண ஆள்களை அனுப்பும்போது ஆலந்தூரிலிருந்து குசவனைக் கூப்பிடஅவர்களுக்குச் சொல்லு.	When you send out men to repair the road to-morrow, tell them to call the potter from Alandur.
அவன் ஆர் என்றால் ஓடுபண்ணுகிறவன்—அவன் பேர் என்ன?	I mean the man who makes the tiles—what's his name?
இப்போ அவன் பேர். நினைப்பு இல்லை, கேட்கட்டா?	I don't recollect his name at present, shall I ask?
இல்லை, அவன் பேர் அக்கரை இல்லை. அவனை அழைப்பி. அவனுக்குக் கொஞ்சம் உத்திரவு பண்ணவேண்டும்.	No, never mind his name. Let him be sent for, I wish to give him some orders.
ஓடு பண்ணுகிறவன் இதோ இருக்கிறான்.	That tile-maker is here.
நல்லது, அவனை இப்போதேபார்ப்பேன்.	Very good, I will see him directly.
ஆலந்தூரில் இருக்கப்பட்டவன், நீயா?	You are a resident of Alandur, are you?
எவ்வளவு காலமாய் அங்கே இருக்கிறாய்?	How long have you lived there?

ஐயா, அங்கே எப்போதும் இருக்கிறேன்.	I have always lived there, Sir.
அங்கே ஓடு பண்ணுகிறவன் வேறே ஒருவன் இருக்கிறானா?	Is there any other tile-maker there?
இல்லை. வேறு ஒருவனும் இல்லை.	No, no other.
ஆனால், போன வருஷம் ஓடுகளுக்கு உத்திரவு பெற்றுக்கொண்ட மனிதன் நீ அல்லவா?	But you are not the person to whom I gave an order about tiles last year?
அவன் என் தம்பி. நான் நோவாயிருந்தேன். நான்தான் அதுகளைச் செய்கிறவன்.	That was my younger brother. I was ill at that time. I am the person who makes them.
ஆனால், பூஞ் சட்டிகள் பண்ணுகிறவனும் நீதானா?	Are you the person, then, that makes the flower-pots too?
ஆம், அதுவும் (நான்தான்.)	I am the same person.
வா, எனக்கு வேண்டியதை உனக்குக் காட்டுவேன்.	Come, I will show you what is wanted.
முதலாவது, இந்த இடத்தில் தரையின் கீழே சாக்கடைக்குச் சில ஓட்டுக் குழாய்கள் அவசியமாய் வேண்டியிருக்கிறது.	First, some pipe-tiles are urgently required for an underground at this place.
எத்தனை வேண்டியதாய் இருக்கிறது அளந்து சொல்லு.	Measure the distance and say how many will be necessary.
முதலாவது அது ஆகட்டும், அது அவசியமானது; பின்பு வேறே உத்திரவு கொடுப்பேன்.	Let that be done first, it is urgent; I will give you other orders after.
சாக்கடை ஓடுகள் எல்லாம் வந்து இருக்கிறதா?	Have those drain-tiles all come?
அதுகள் நன்றாய் இருக்கிறதா? முழுதும் வெந்து இருக்கிறதா?	And are they good? thoroughly baked?
ஆம் ஐயா, மெத்த நல்லதும் செம்மையாயும் இருக்கிறது.	Yes, Sir, very good and right.
ஆனால் உனக்குக் காட்டின இடத்திலே அதுகளை நீ போடவேண்டும், அதின்மேலே ஜாக்கிரதையாய் மண்ணை நிரப்பி, அந்தச் சாலையைச் சமமாயும் நன்றாயும் செய். வேலை சாயந்திரத்துக்குள்ளே முடிய வேண்டும்.	Then you must lay them in at the place I showed you; fill in the earth carefully over them, and make the road all smooth and level. The work must be finished by evening.
ஓடு பண்ணுகிறவனை என்னிடத்தில் அனுப்பு.	Send the tile-maker to me.
இங்கே பார், இப்படிப்பட்ட வேலைக்குப் பெரிதாயும் சதுரமாயும் மெல்லிசாயும் ஓடுகள் எப்போதாகிலும் பண்ணி இருக்கிறாயா?	Look here; did you ever make any tiles for flooring, large, square and thin, for this sort of work?

இல்லை, ஐயா; நான் அப்படிப்பட்டது செய்தது இல்லை, ஆனால் அதுகளை நான் பண்ணக் கூடும்.	No, Sir; I have never made such, but I can make them.
ஓட்டுக்காரன் இன்னம் மாதிரி கொண்டுவர வில்லையா?	Has the tile-man not brought his specimens yet?
இன்னம் இல்லை.	Not yet.
மற்றவர்களுக்குப் புத்திவரும்படி அவனை மெத்த குரூரமாய் தண்டிக்க வேண்டும்.	He must be severely punished as an example to the others.
இன்றைக்கு முன்னே அதுகளைக் கொண்டு வருவேன் என்று சொன்னான் அல்லவா?	He promised them before to-day, did he not?
பதினஞ்சாம் தேதி அதுகளைக் கொண்டுவரக் கூடும் என்று சொன்னான், அது நாலு நாள் ஆச்சுது.	He said he would bring them on the 15th, that is, four days ago.
ஐயா, ஓட்டுக்காரனைக் குறித்து கேட்கிறாயோ? இதோ இருக்கிறான், இப்போ வந்தான்.	Were you asking, Sir, for the tile-man? Here he is,—just come.
நீ பேச்சுக் கொடுத்த நாளிலே அந்தச் சதுர ஓடுகள் கொண்டுவரவில்லை.	You have not brought those flooring tiles on the day you promised.
ஐயா, அதைச் சூளை போட மெத்த தொந்திரவு கொடுத்தது. தயவு செய்து அதைப்பாரும்.	Sir, the burning of them has given a great deal of trouble. Please inspect them.
நல்லது, இதைப்போல இரண்டாயிரத்தைந்நூறு பண்ணினால் போதும்.	Well, if you can make 2,500 like these, that will do.
அதுகள் எப்போ வேண்டும்?	When are they wanted?
அதுகள் வருகிற மாதம் ஒன்பதாம் தேதி வேண்டும்.	They are required on the 9th of next month.
நல்லது, ஐயா; அப்படியே கொண்டுவருவேன்.	Very well, Sir, I will do so.
கெடுவு தப்பிப் போகாதே.	Do not fail to bring them at that fixed time.
இல்லை, ஐயா; தப்பிப் போக மாட்டேன். நான் பேச்சு தப்புகிறவன் அல்ல.	No, Sir; I will not fail. I am not a person to break my word.
இந்தச் செங்கல்லுகள் நன்றாய் வேக வில்லை.	These bricks are not well burnt.
இவ்வேலைக்கு இப்படிப் பட்டச் செங்கல்லுகள் போடாதே.	Do not use such bricks for this work.
இந்தச் செங்கல்லுகள் சூளையிலே சுட்டதா?	Are these bricks burnt in a kiln?
இதுகள் எல்லாம் சூளையிலே சுட்டது.	These are all kiln-burnt.

உன் வேலைக்கு இந்தப் போரிலிருந்து செங்கல்லுகள் எடுத்துக் கொள்ளு.	Take bricks from this stack for your work.
அங்கே சுட்டச் செங்கல்லுகள் எத்தனை போர்கள் இருக்கின்றன ?	How many stacks of burnt bricks are there ?
நாலு முழுப்போர்கள்.	Four complete stacks.
இந்தப் போர்களின் அளவு என்ன ?	What is the size of these stacks ?
௧௨-அடி நீளம் ௧௨-அகலம் ௪-அடி உயரம் (இருக்கிறது.)	Twelve feet long, twelve feet broad, and four feet high.
அதுகளில் ஒன்று செலவாய் போச்சுது.	And one of which stacks has been expended.
இப்படிப்பட்டப் போரிலே எத்தனைச் செங்கல்லுகள் இருக்கின்றன ?	How many bricks are there in such a stack ?
ஐயா, உடனே சொல்லுவேன்.	I will tell you directly, Sir.
ஐயாயிரத்திருநூற்று நாற்பத்தெட்டு.	Five thousand two hundred and forty-eight.
இந்தச் செங்கல்லுகளின் பொடிகளை யெல்லாம் கூட்டு.	Collect all these pieces of bricks.
அதுகளை எல்லாம் சேர்த்துவை.	Place them all together.
இதுகள் எல்லாம் தளவரிசைக்கு வேண்டி இருக்கும்.	These will all be required for flooring.
அது மெத்த அவசியமாய் இருக்கிறது.	That is absolutely necessary.
இன்னம் அனேக செங்கல்லுகள் வேண்டி இருக்கும்.	More bricks will be needed.
நீ உடனேபோய் அதுகளுக்கு உத்திரவு கொடு.	You must go at once to order them.
இரண்டு கட்டை வண்டிகள் குப்புச்சாமியைக் கேளு.	AskCoopoosawmy for two carts.
அங்கே ஏதாவது கட்டை வண்டிகள் இருக்கிறதா கேளு.	Ask if there are any carts there.
கோடம்பாக்கத்திலிருந்து நேற்று வந்த செங்கல்லுகள் இப்போ எங்கே யிருக்கின்றன ?	Now, where are the bricks that came yesterday from Kôdambâkkum ?
அதோ, புது பங்களா கட்டப் போகிற விடத்திலே அதுகள் கொட்டியிருக்கிறது.	They were laid down yonder where the new bungalow is to be built.
இதுவும் ஒன்றாய் கூட்ட வேண்டும்.	This too must be collected together.
செங்கல்லுகளின் போர்கள் தவிர இதை ஒன்றாய் கூட்டு.	Collect it in one heap beside the stacks of bricks.
அந்த வேலைக்கு எத்தனைச் செங்கல்லுகள் இப்போ கொட்டியிருந்தது ?	How many bricks have now been laid down for that work?

சுமார் ஐயாயிரத்தைந்நூறு.	About five thousand and five hundred.
இந்தச் செங்கல்லுகள் இன்றைக்கு அங்கே கொண்டுபோக நீ கட்டை வண்டிகள் கொண்டு வர வேண்டும்.	You must send for carts to-day to take these bricks there too.
சனிக்கிழமை கீழ்ப்பாக்கத்திலிருந்து வந்த அந்த வண்டிகள் எவ்விதமாயிருந்தது.	What kind of carts were those which came from Keelpack on Saturday?
அவைகளில் மூன்று பெரியதும் நல்லதும் ஆகிய இரட்டை மாட்டு வண்டிகள், மற்றவைகள் எல்லாம் சின்ன வண்டிகள்.	Three of them large and good; the rest all small, 2-bullock carts.
மேலும் மாடுகள் எல்லாம் சின்னதும் பலவீனமுள்ளதுமாயிருக்கின்றது.	And the bullocks are all small and weak.
இதுகள் நல்ல பலமான ஒரு சக்கரக் கைவண்டிகள்.	These are good strong wheel-barrows.
இதின் சக்கரம் கொஞ்சம் பழுதாயிருக்கிறது.	The wheel of this one is a little damaged.
இது சீக்கிரமாய் சரியாய்ப் போடக்கூடும்.	This can soon be put to rights.
ஆனால் இது இப்போ வேண்டியதில்லை.	But it is not required at present.
இந்தச் செங்கல்லுகள் எல்லாம் இந்தக் கைவண்டிகளில் நாங்கள் கொண்டுபோகக் கூடும்; கட்டை வண்டிகள் அவசியம் இல்லை.	We can take all these bricks in these hand-barrows; there will be no necessity for the carts.
அது மெத்த தூரம் அல்ல.	It is no great distance.
நல்லது, அப்படிச் செய், ஆனால் அந்த வண்டிகள் இராயப்பேட்டையிலிருந்து இன்னம் அனேக செங்கல்லுகள் கொண்டுவரக் கூடும்.	Very good, do so; then the carts can go to bring more bricks from Royapetta.
இதுகளை எடுக்காதே; அதுகள் உன் வேலைக்கு உதவாது.	Don't take these; they will not do for your work.
அதுகள் மெத்த முறுக்காயிருக்கிறது.	They are very much twisted.
உன் ஆளுகள் நாளைக்குக் காலமே வேலை துவக்க ஆயத்தமாயிருப்பார்களா?	Will your men be ready to commence work to-morrow morning?
பதினெட்டு பேர்கள் ஆயத்தமாயிருப்பார்கள்.	Eighteen men will be ready.
நாளைநன்றைக்கு இன்னம் இரண்டு பேர் வருவார்கள்.	Two more will come the day after to-morrow.
அஸ்திவாரத்துக்குப் பள்ளம் வெட்டி ஆச்சுதா?	Is the excavation for the foundation ready?

இன்னம் இல்லை; ஆனால், ஒட்டர்கள் இப்போ வெட்டுகிறார்கள். இன்று மாலைக்கு அது மெய்யாய் தயாராயிருக்கும்.	Not yet; but the diggers are now digging it, and by this evening it will certainly be ready.
வெட்டுதல் எவ்வளவு ஆழம் இருக்கும்?	How deep is the excavation to be?
எத்தனை ஒட்டர்கள் வெட்டுகிற வேலை செய்கிறார்கள்?	How many diggers are employed upon the excavation?
இன்றைக்கு எத்தனை பேர்களோ எனக்குத் தெரியாது, நேற்று இருபத்து நாலு பேர் இருந்தார்கள்.	I don't know how many to-day, yesterday there were four and twenty.
என்னோடு கூட அங்கே வா, நாம் அதைப் பார்ப்போம்.	Come there with me, and we will look at it.
அந்த ஆளுகள் இப்போ அங்கே இல்லை; அவர்கள் பகல் சாப்பாட்டுக்குப் போனார்கள்.	The men are not now there; they have gone to dinner.
இதோ அவர்கள் இப்போ திரும்பி வேலைக்கு வருகிறார்கள்.	Here they are now coming back to work.
ஒட்ட மேஸ்திரியைக் கூப்பிடு.	Call the maistry of the diggers.
இந்த வெட்டுதல் இன்றைக்கு ஆயத்தமாயிருக்குமா?	Will this excavation be ready to-day?
ஆம்; அது சாயந்திரத்துக்குள்ளே முழுதும் முடியும்.	Yes; it will be complete by evening.
வேலை முடிந்திருக்குமென்று சொல்லுகிறாய், இன்று சாயந்திரமா?	The work will be finished you say this evening?
இந்த வேலை முழுதும் உன்னால் ஆயிற்றா?	Has the whole of this work been done by you?
நேற்று முழுதும் இங்கே இருந்தாயா?	Did you remain here all day yesterday?
திரும்பி காலமே நாங்கள் வரலாமா?	Shall we all come back again in the morning?
இல்லை; உன் ஆள்களில் பதினஞ்சு பேரைக் கொண்டுவா, விடியற்காலத்தில் அவர்கள் எல்லாரும் ஆயத்தமாயிருக்கட்டும்.	No; bring fifteen of your men, let them all be present at daybreak.
இதின் ஆழம் சரியாயிருக்கிறதா?	Is the depth of this correct?
மெத்த சரி, அதை இப்போது தான் அளந்தேன்.	Quite correct; I have just measured it.
ஆனால் இப்போ; அந்த மேஸ்திரி எங்கே போனான்?	Now, then, where has that maistry gone to?
அவன் வருகிறான்.	He is coming.
நான் உத்திரவு கொடுத்த சுண்ணாம்பு உனக்கு கிடைத்ததா?	Have you obtained the lime I ordered?

ஆம் ஐயா, நேற்றுசாயந்திரம்மேஸ்திரி எனக்குக் கொடுத்தான்.	Yes, Sir, Maistry gave it to me yesterday evening.
ஆரம்பத்தில் அது வேண்டியதில்லாதபடியால், நான் இன்னம் அதைக் கொண்டுவர இல்லை.	I have not brought it yet, for it will not be required at first.
இப்போது அது எங்கே போட்டிருக்கிறாய் ?	Where have you put it now ?
அது குப்புசாமியின் வசத்தில் இருக்கிறது.	I left it in charge of Kuppusawmy.
உனக்கு அது இங்கே இரண்டாம் நாளைக்கும் வேண்டியதாய் இருக்கும்.	You will require it here the second day.
நாளை வேலை எல்லாம் மணி யாசமாய் முடிந்து இருக்கும்.	To-morrow's work will all be done with mud mortar.
அந்தச் செங்கல்லுகளை அப்படிப் போடாதே என்று இந்த ஆளுகளுக்குச் சொல்லு.	Tell these men not to throw down the bricks in that way.
பார் எத்தனைச் செங்கல்லுகள் ஒடிந்து இருக்கிறது.	See how many bricks have been broken.
இந்த அஸ்திவாரம் வெட்டுதல் அடியிலே இன்னம் கொஞ்சம் சமமாய் பண்ணியிருக்கவேண்டும்.	This excavation must be made a little more level at bottom.
இப்போது காலம் போக்காமல், வேலை துவக்கு.	Now lose no time, set to work.
குமஸ்தா வேலைக்கு வந்தபோது என்னிடத்தில் வரச்சொல்லு.	When the writer comes to work, tell him to come to me.
நீ ஆளுகளை மோஸ்தர் பார்த்தையா ?	Have you mustered the men ?
மொத்தம் எத்தனை ஆள்கள் அங்கே யிருக்கிறார்கள் ?	How many men are there altogether ?
ஒரு மேஸ்திரியும், இருபது கொல்லற்றுக்காரர்களும், இரண்டு பக்காளிகளும் இருபத்தெட்டு ஒட்டர்களும் முப்பது கூலிகளும் இருக்கிறார்கள்.	There are one Maistry, twenty masons, two pukkalies, twenty-eight diggers, and thirty coolies.
இப்போது இருபது கொற்றர்கள் இருக்கிறார்களா ?	Are there twenty masons at present ?
இல்லை, ஐயா, இப்போ ஆசர் இல்லை; அந்த ஆள்களின் மொத்தம் அங்கே இருக்கும்: இப்போதான் நான் மறந்துபோனேன், இப்போது அந்த வேலையில் பதினெட்டு பேர் இருக்கிறார்கள்.	No, Sir, they are not present now; there will be that number of men altogether: I forgot just now, there are eighteen men on the work at present.
இந்தப் பக்கத்து வெட்டுதலிலே உன்னிடத்தில் அனேக ஆளுகள் இருக்கிறார்கள்.	You have too many men in the excavation at this part.

அவர்கள் மெத்த கிட்ட இருக்கும்போது சரியாய் வேலைசெய்ய மாட்டார்கள்.	They cannot work properly if they are so close.
அந்த மூலையிலே செங்கல்லுகள் அடுக்கும் விதம் இந்த ஆளுக்குக் காட்டு.	Show this man how to lay the bricks at the corner.
மூன்றாவது செங்கல் இந்த விதமாய் அறு.	Cut the third brick in this manner.
இந்தச் சாந்துக்கு இன்னம் கொஞ்சம் தண்ணீர் வேண்டியது.	A little more water is needed in this mortar.
இந்தச் சாந்துக்கு ஆற்று மணல் உனக்கு எங்கே கிடைத்தது.	Where did you get the river sand for this mortar.
இது குளத்திலிருந்தது.	This is from the tank.
இது மெத்த களிப்பு, கொஞ்சம் மணல் இதனோடு கலக்கவேண்டும்.	This is too stiff, a little sand should be mixed with it.
இந்த விதமாய் எவ்வளவு உயரம் இந்தச் சுவர் கட்டி இருக்கிறது?	How high is the wall to be made in this manner?
நீ இங்கே நேராய் அந்தச் செங்கல்லுகள் பரப்பவில்லை.	You are not laying the bricks quite straight here.
கயிறு எங்கே?	Where is the cord?
அந்தக் கயிற்றை நீ அவிழ்த்துடாமல் இருக்கவேண்டும்.	You must not unfasten the cord.
அந்த முளையை உள்ளே போக இன்னம் கொஞ்சம் கெட்டியாய் அடி.	Drive in the peg a little firmer.
அந்தக் கயிற்றை அவிழ்த்தால் சுவர் நேராய்க் கட்டக்கூடாது.	The wall cannot be built straight if the cord is unfastened.
இந்தக் கயிற்றினாலேதான் சரியாய் நீ பண்ண வேண்டும்.	You must make it exactly even with this cord.
பார், அவ்வளவு ஜல்லி சுவரின் நடுவிலே அவர்களைப் போடும்படிப் பண்ணாதே.	See, do not let them put so many broken bricks in the middle of the wall.
சாந்தைக் காயும்படிச் செய்யாதே.	Don't let the mortar get dry.
மேஸ்திரி, இந்த இரண்டு சுவர்களின் அகலத்தை அளந்து இருக்கிறையா?	Maistry, have you measured the breadth of these two walls?
அதுகள் இரண்டும் மெத்த அகலமாய்க் காணப்படுகிறது.	They both appear to be much too broad.
உன்னுடைய இரண்டடி மட்டப் பலகை கொண்டுவந்து இப்போ அதுகளை அள.	Bring your two-feet rule and measure them now.
இதின் அகலம் இரண்டடி இருக்க வேண்டும்.	The breadth of this should be two feet.

ஆம், ஐயா, அது மெத்த அகலம்; இது இரண்டடி மூன்றங்குலம்.	Yes, Sir, it is too broad; this is 2 feet 3 inches.
ஒன்றேகால் அடி.	One foot and a quarter.
ஒன்றே முக்காலடி.	One foot and three quarters.
இது அதுக்கும் மெத்த அதிகமாய் இருக்கிறது, இது இரண்டடி நாலு அங்குலம்.	This is even more than that, this is 2 feet 4 inches.
இப்போ இது மெத்த அசட்டை. உன்னிடத்தில் பிளானிருக்கிறது, அல்லவா? இந்த இரண்டு சுவர்களின் அஸ்திவாரங்கள் ஒவ்வொன்றுக்கு இரண்டடி இருக்கவேண்டும் நீ பார்.	Now, this is great carelessness. You have the plan, have you not? and you see that the foundations of these two walls should be each two feet.
ஐயா, எனக்குத் தெரியும்; இரண்டடி இருக்க அவர்களுக்கு உத்திரவு பண்ணினேன்.	I know, Sir; I ordered them to be two feet.
உத்திரவின் படி அதுகள் பண்ணி இருக்க நீயும் பார்க்க வேண்டும்.	But you must also see that they are made according to the order.
மேலும் இங்கே பார்; இது எவ்வளவு கோணலாய் இருக்கிறது நீ பார்க்கிறாயா?	Also look here; do you see how crooked this is?
ஐயா, அதுக்குச் சந்தேகமில்லை.	There is no doubt of it, Sir.
இந்த இரண்டு சுவர்களும் ஒரு கோட்டிலிருக்க வேண்டும், ஆனால் நீ பார் அதுகள் இல்லை.	These two walls should be in one line, but you see they are not.
அதுகள் ஒரே அகலமாய் இல்லாதபடியால், அப்படி நீ பார்க்கக் கூடாது.	You can't try it in that way, for they are not of the same breadth.
அந்தச் சுவரின் நடுவே கயிறு இழுக்கவேண்டும், பின்பு இதின் நடுவிலும் இருக்கப் பார்.	You must stretch the cord along the middle of that wall, and then see if it is also in the middle of this.
அந்தக் கடைசிச் சுவரின் நடுவிலே ஒரு அடையாளம் இருக்கிறதா?	Is there a mark in the middle of the wall at that end?
ஆம், ஐயா, என் விரல் அந்த அடையாளத்தில் இப்போ இருக்கிறது.	Yes, Sir, my finger is now on the mark.
அந்த ஆளின் கையில் கயிற்றைக் கொடு.	Give the cord into that man's hand.
கடைசி அடையர்ளத்தின் நடுவிலே கயிற்றைப் பிடி. அங்கே தான். கொல்லற்றினாலே அடையாளம் போட்டாயா?	Hold the cord upon the middle mark at that end. Just there. Did you make a mark with the trowel?
மேஸ்திரி, இப்போ, இங்கே வந்து நின்று, இதைப் பார்.	Now, Maistry, come stand here and look at this.

அது மெய், ஐயா, மெத்த வெளியே இருக்கிறது.	It certainly is, Sir, very much out.
ஆனால், எப்படி அப்படிப்பட்ட வேலைக்கு உத்தரவு கொடுத்தாய்?	How then did you permit such a piece of work as that?
இந்தக் கயிற்றை அவிழ்த்து விடாதே; அது அடிக்கடி வேண்டி இருக்கிறது.	Don't let them unfasten this cord; it is constantly required.
நாளைக்குக் காலமே அந்த வேலை துவக்கக் கூடும்?	You will be able to commence the work to-morrow morning?
ஆம், ஐயா; சுண்ணாம்பு இன்று மத்தியானத்துக்கு வரும்.	Yes, Sir; the lime will come this afternoon.
மணலும் களிமண்ணும் இருக்கிறதா?	Have you sand and clay too?
ஆம், ஐயா; எல்லாம் தயாராய் இருக்கிறது.	Yes, Sir; all is ready.
அந்த வேலை இந்த இடத்துக்கு வந்தவுடனே அஸ்தி வாரத்தை நிரப்பு.	Fill the foundation as soon as the work has reached this point.
தரையின் அடியிலே ஆறங்குல வேலையிருக்கும்.	There will be six inches of work below the surface of the ground.
அந்த அளவுகோல் எடு, இல்லாவிட்டால் அது மெய்யாய் போக்கடிந்து போம்.	Lift up that measuring rod, or it will certainly be lost.
கொஞ்சம் ஒத்திப்போ; நீ அளவுகோலின் மேலே நிற்கிறாய்.	Move aside a little; you are standing on the measuring rod.
இந்தப் பக்கத்திலே அந்தச் சுவர் மெத்த சமமாய் இருக்கிறது என்று நீ நினைக்கிறாயா?	Do you think that the wall is quite level at this part?
அந்தப் பக்கத்திலே மெத்த கொஞ்சம் உயரமாய் இருக்கிறது.	It is a little too high on that side.
இந்தக் கடைசியிலே செங்கல் வை, அதின் மேலே கயிற்றை சமமாய் இழு.	Place a brick at this end, and stretch the cord straight over it.
கயிற்றுக்கு மட்டப் பலகை போடு; இப்போ சரியாய் இருக்கிறதா பார்.	Apply the level to the cord; see if it is now right.
இப்போ அது கொஞ்சம் மெத்த உயரமாய் இருக்கிறது, கொஞ்சம் செங்கல் உடை.	Now it is a little too high, break the brick a little.
அது எல்லாம் பொடியாக்கினாய், வேறே எடுத்துக்கொள்ளு.	You have broken it all to pieces, take another.
நான் இந்த வேலை எல்லாம் நாளைக்குக் காலமே சரி பார்க்க வேண்டும் என்று எண்ணுகிறேன்.	I hope I shall see this work all right to-morrow morning.

இது நன்றாயும் சீக்கிரமாயும் செய்து முடிக்க எனக்கு மெத்த ஆசை இருக்கிறது.	I am very anxious to have this done well and quickly.
இன்றைக்கு இந்த வேலை எவ்வளவு ஆச்சுது?	How far has this work reached to-day?
அந்தச் சுவர் உயரத்தில் இரண்டரை அடி இப்போ கட்டி இருக்கிறது.	The wall has now been made $2\frac{1}{2}$ feet in height.
பார், இங்கே கொஞ்சம் சரியாய் இல்லை.	See, here is something else not right.
நல்லது, அது பிளானின்படியே இருக்கிறதா?	Well, is that according to the plan?
மெய்யாயில்லை. இது இரண்டு அடி மூன்று அங்குலங்கள் கட்ட உத்திரவு இருந்தது, அது இரண்டரை அடி கட்டி இருக்கிறது.	No, certainly not. This was ordered to be two feet three inches, and it has been made two feet and a half.
அஸ்திவாரத்தின் இந்த இரண்டு அடையாளங்களின் அகலம் சமமாய் இருக்க இல்லை என்று நேற்று நான் உனக்கு நினைப்புப் பண்ணினேன்.	I reminded you yesterday that the breadth of these two points of the foundation was not to be equal.
இது நேற்று சாயந்திரம் இது ஆச்சுது, அந்தக்காலத்திலே நான் இங்கே இருந்தது இல்லை.	This was done yesterday evening, and I was not here at the time.
புதுக் கடையில் மற்ற வேலைபார்த்துக்கொண்டு இருந்தேன்.	I was looking at the other work in the new bazaar.
ஆனால், நீ சாக்கிரதையாய் பார்த்து மற்றவேலை முடிக்கவேண்டும். எப்போதும் ஆசராயிருக்கிற மேஸ்திரி இல்லாமல் இது சரியாய் நடக்கமாட்டாது.	You must look sharp then and finish that other work. This cannot go on properly without a maistry being always present.
பின்னும் இங்கே பார், இங்கே இன்னொரு சுவர் முழுதும் கோணலாய் இருக்கிறது.	And look here, here is another part of the wall quite crooked.
இதுவும் நேற்றுச் சாயந்திரம் நான் பார்த்தது இல்லை.	I did not see this either yesterday evening.
ஆனால் அவர்கள் சுவர் கோணலாய் கட்டும் போது பார்க்காத இவர்கள் என்ன கொற்றர்களாயிருக்கிறார்கள்?	But what kind of masons are these who cannot see when they are building the wall crooked?
ஒட்டர்கள் அஸ்திவாரம் வெட்டின படியே அவர்கள் சுவர் கட்டினார்கள்.	They built the wall just as the diggers had cut the excavation.
ஆனால், நான் உனக்கு கொடுத்த இந்த அடையாளங்களினாலே என்ன பிரயோசனம்?	Then what is the use of these marks that I gave you?

ஐயா, எனக்குத் தெரியும். அவர்களுக்கு அதை நான் காட்டினேன்.	Sir, I understand. I pointed it out to them.
சுவரின் கனத்தின் நடுவிலே இந்த ஆப்புகள் இருக்க வேண்டும் என்று உனக்கு நான் விவரித்துச் சொன்னதில்லையா ?	Did not I explain to you that these pegs are in the middle of the thickness of the wall ?
மேலும் இந்த ஆப்புகள் சுவரின் பக்கங்களில் இருக்கின்றன.	And these pegs are for the sides of the wall.
ஆப்பிலிருந்து மற்றொரு ஆப்புக்குக் கயிற்றை இழுத்திருந்தால், சுவரின் பக்கங்கள் இந்த கோடுகளுக்கு ஒத்திருக்கும்; பின்பு அந்த அஸ்திவாரம் வெட்டுதல் தப்பாய் இருந்தாலும், செவ்வையாய் கட்டப்பட்டிருக்கும்.	If you will stretch a cord from peg to peg and make the sides of the wall agree with these lines, then it will be built right although the excavation may be wrong.
அதினோடு இதைச்சேரு; அதுகளைப் படும்படிப் போடு, அல்லது அதனோடு இதை கலக்கப் பண்ணு.	Join this with that; place them in contact, or mix this with that.
அந்த அஸ்திவாரம் வெட்டுதல் எங்கேயாவது மெத்த நெருக்கமாய் இருந்தால், அது சுளுவாய் அகலமாக்கக் கூடும்.	If the excavation is too narrow in any part, it can easily be widened.
ஐயா, எனக்குத் தெரியும் அவர்களுக்கு இதை எல்லாம் காட்டினேன்; ஆனால் அவர்கள் அதைச் செய்தது இல்லை.	I understand, Sir, and I showed all this to them; but they have not done it.
இவர்களுக்கு மெய்யாய் நினைப்பில்லை.	They certainly have not remembered.
இப்போ போய் இன்னம் கொஞ்சம் கடைசியிலே அந்த ஆப்பைப் பிடித்துக்கொள்ளு.	Now go and hold it on the peg at the further end.
இங்கே ஒரு மராப்பும் அகப்படவில்லை.	There is no appearance of any wooden peg here.
அதோ, உன் வலதுகை அண்டை—அஸ்திவாரம் வெட்டுதலுக்கு அப்பாலே ஒன்றரை அடி.	There, to your right hand—a foot and a half beyond the excavation.
பார், செங்கல்லுகள் போட்டு அந்த ஆப்பை நீ மூடிபோட்டாய். மெய்யாகவே, அந்த அடையாளங்களுக்குமேலே செங்கல்லுகள் போட்டால் நான் சொன்னபடி நீ செய்யவே கூடாது.	See, you have covered the peg over with bricks. Of course, you can't do as I directed if you put bricks over the marks.

அது வண்டிக்காரர்களுடைய வேலை. அவ்வளவு கிட்ட செங்கல்லுகள் போடவேண்டாம் என்று இருபது தரம் அவர்களுக்குச் சொன்னேன், ஆனால் இன்னம் அவர்கள் செய்கிறார்கள்.	That is the carters' doing. Twenty times I have told them not to lay the bricks so near, but still they do it.
ஆம்; ஆனால் அந்தவேலை பார்த்திருந்தால் அவர்கள் இங்கே அந்தச் செங்கல்லுகள் போடமாட்டார்கள். அடையாளங்கள் உதவும்.	Yes; but if the work were looked after and marks made use of, they would not throw the bricks down here.
இப்போது சில செங்கல்லுகள் எடுத்துப்போடு.	Now lift up some of the bricks.
இப்போ அந்த ஆப்பை பார்க்கிறாயா?	Do you see the peg now?
இப்போ அந்த ஆப்பின் மேலே கயிற்றைப் பிடி.	Now hold the cord on the top of the peg.
இது என்ன? நீ பின்னும் அந்தக் கயிற்றை தளர்த்தி விட்டாயா?	What is this? Have you loosed the cord again?
ஐயா, அந்தக் கயிறு அறுந்து போச்சுது.	The cord has broken, Sir.
அது எப்படி அறுந்தது?	How did it break?
அது இப்போ பழசும் பலவீனமுமாய் இருக்கிறது.	It is now old and weak.
அந்தத் தரை பனியினாலே காலையில் எப்போதும் ஈரமாய் இருக்கிறது.	The ground is always very wet in the morning with dew.
இன்றைக்குப் புதிதாய் ஒன்று கொண்டா.	Get a new one to-day.
இதிலே மெத்த முடிகள் இருக்கின்றன.	There are many knots on it.
மறுபடியும் அந்த ஆப்புக்குக் கயிறு கட்டு.	Apply the cord to the peg again.
மெதுவாய், மெத்த கெட்டியாய் இழுக்காதே.	Gently, don't pull too hard.
இப்போ நீ பார் இங்கே எவ்வளவு வித்தியாசமாய் இருக்கிறது.	Now you see how much difference there is here.
இப்பொழுது நாம் இந்தச் சுவரை பார்ப்போம்.	And now let us look at this wall.
நல்லது, இது ஒன்று மெத்த சரி. நான் சரியல்ல என்று நினைத்தேன். அது என் தப்பு.	Well, this one is quite right. I thought it was not. That was my mistake.
இப்போ போய் மற்றச் சுவர்களை எல்லாம் அப்படியே பார்த்து, தப்பிப்போய் இருக்கிற இடத்தில் செவ்வைபண்ணு.	Go now and try all the other walls in the same manner. Where you find anything wrong, have it corrected.
இங்கேவா, இந்த வேறே பார்க்குச்சுக்கு.	Come here, to this other barracks.

உனக்குக் கொஞ்சம் நான் காட்ட வேண்டும்.	I wish to point out something to you.
இது, நீ பார், இந்தக் கடைசியிலே சுபாவமான தரை அல்ல.	This, you see, at this end, is not the natural ground.
சரியான மட்டத்துக்குத் தரையைக் கொண்டுவர இங்கே நிரப்பின மண்ணு இருக்கிறது.	This is earth which was filled in here to bring the ground to a uniform level.
இந்த வெட்டுதல் முழுதும் அந்த மண்ணிலே போட்டு இருக்கிறது; அது இன்னம் கொஞ்சம் ஆழமாய்க் கொண்டுபோக வேண்டும். ஆகையால் அந்தச் சுவர் கெட்டித் தரையிலிருக்கலாம்.	All this excavation is in that made earth; it must be carried down deeper so that the wall may rest upon solid ground.
ஐயா, எனக்குத் தெரியும். இன்னம் ஒரு அடி ஆழம் வெட்டுவேன், பின்பு நீர் பாரும்.	I understand, Sir. I will dig it one foot deeper, and then you will look at it.
ஆம், அப்படிச் செய். நீ நிற்கிற இடத்தில் இருந்து வெட்டுதல் துவக்கு.	Yes, do so. Commence the digging from that place, where you now stand.
கொல்லற்று மேஸ்திரியைக் கூப்பிட்டு இதை அவனுக்கு விவரித்துச் சொல்லு. அவர்கள் ஒரேதரமாய் துவக்கட்டும்.	Call the maistry of the bricklayers and explain this to him. Let them begin at once.
அந்த வெட்டுதல் ஆயத்தமாய் இருக்கிறது. அதை வந்து பாரும்.	That excavation is ready. Be pleased to inspect it.
இன்னம் கொஞ்சம் ஆழம். இது இன்னம் அபாயமான தரையாயிருக்கிறது.	A little deeper here. This is still insecure ground.
அது போதும். இது இன்னும் எவ்வளவு ஆழம்?	That will do. How much deeper is this?
அதுக்கு சரியான அளவு பண்ணி எவ்வளவு என்று நீ எனக்குத் தெரிவி. என் மதிப்புக்கு மேலே அனேக செங்கல்லுகள் பிடிக்கும்.	Make an accurate measurement of it and inform me how much it is. This will cause an additional expenditure of bricks beyond my estimate.
அந்த வேலை இப்போ துரிதமாய் நடக்கக்கூடும். அனேக செங்கல்லுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.	The work can go on rapidly now. There are plenty of bricks collected.
இந்த அஸ்திவாரச் சுவர் கட்டும்போது, அனேக செங்கல் சல்லிகள் போடக் கூடாது என்று நான் சொன்னதை நினை. முழுச் செங்கல் போடு.	And in building this foundation wall, remember what I told you, not to use so many small pieces of broken bricks. Use entire bricks.
தரைக்குமேலே கட்டி இருக்கிற கட்டடத்தின் தளவரிசை எவ்வளவு உயரம்?	What height is the floor of this building to be made above the ground?

இந்தக்கடைசியிலேதரைக்குமேல் இரண்டடி உயரமிருக்கும், பள்ளமாயிருக்கிற இடத்தின் கடைசியிலே இரண்டடி மூன்றங்குலமிருக்கும்.

It will be two feet above the ground at this end, and two feet and three inches at the other end, where the ground is lower.

ஆனால் நான் சாயந்திரத்தில் வந்து மட்டப்பலகையைக் கொண்டு சரியாய்த் தீர்மானிப்பேன்.

But I will come in the evening and ascertain exactly by means of the levelling instrument.

மற்ற பார்க்குச்சு அந்த மட்டத்துக்குத் திட்டமாய்ப் பண்ணப்பட்டிருக்கிறது.

It is to be made precisely on the same level with that other barracks.

திங்கட்கிழமை உனக்குச் சரியான உயரம் காட்டினேன்.

I pointed out the proper height to you on Monday.

அப்போது நீ போட்ட அடையாளம் இது.

This is the mark which you made at the time.

வேலையின் ஒரு அடி அந்த பார்க்குச்சுபோல தளவரிசையின் மட்டத்துக்கு முழுதும் தாழ்வாய் கட்டியிருக்க இல்லை என்று நீ நினை; ஆனால் பாதி தாழ்ந்தும் பாதி உயர்ந்து மிருக்கிறது.

You will recollect that the one foot of work is not to be built as in that barracks all below the level of the floor; but half below and half above.

கதவின் சட்டங்கள் இப்படியே செல்லேறாமலிருக்கும் படிச் செய்தல் மெத்த நல்லது.

In this way the door-frames will be better protected against white ants.

அப்படியே நல்ல வேலையாய் ஜன்னலின் சட்டங்கள் சுற்றியிருக்கும்.

You will surround window-frames with good work in the same way.

ஐயா, நினைப்பிருக்கிறது, வேறே பார்க்குச்சின் மூன்று சன்னல்கள் முன்னமே ஆச்சுது. அதுகளைப் பாரும்.

I recollect, Sir, where windows of the other barracks are already done. Please look at them.

இது என்ன? மேஸ்திரி, இங்கே வா, ஐயா இது என்ன?

What is this? Maistry, come here. What is it, Sir?

இந்தச் சுண்ணாம்பை கொல்லற்றினாலே தேய்க்க வேண்டுமென்று நேற்று நான் உனக்குச் சொன்னதில்லையா? இன்னம் இங்கே முன்னிருந்தபடியே இருக்கிறது.

Did not I tell you yesterday to have a trowel set up over this lime? Yet here it is all just as it was.

ஆம், ஐயா; மெய்யாய் நீர் உத்திரவு கொடுத்தீர்; ஆனால் எங்களிடத்தில் இருந்தது என்று சொன்ன அந்த கொல்லறு துருப்பிடித்துக் கெட்டுபோய் இருக்கிறது. இப்போது அது உதவாது.

ரஞ்செய்து அநேக திரவியத்தைச்சம்பாதித்தான். சுவிசேஷனென்பவன் தன்னாயிரம் *பொன்னையுங் கற்றறிந்த பெரியோர்கட்குக் கொடுத்துச் சகல சாஸ்திரங்களையுங் கற்று மிகவும் பண்டிதனாகி வறுமையை யடைந்து தன் சிநேகிதனானசுமுகனிடத்தில் வந்து சேர்ந்து சீவனஞ் செய்துகொண்டிருந்தான். சுமுகன் தன்தேசத்துக்குப்போக நினைத்துத் தன்னுடைய திரவியத்தை யெல்லா மொட்டகங்களின்மேலேற்றிச் சுவிசேஷனையும் அழைத்துக்கொண்டு போகையில், வழியிலொரு காட்டிலே அவனுடைய பொருளையெல்லாம் கள்ளரடித்துப் பறித்துக்கொண்டார்கள். பின்பு இருவரும் தரித்திரராய்த் தங்கள் வீடு வந்து சேர்ந்தார்கள். இப்படியிருக்கை, அத்தேசத்தை யாளும் இராசா தனக்கொரு வித்துவான் வேண்டுமென்று அறிவித்த காலத்திலே சுவிசேஷன் போய்த் தன் கல்வித் திறத்தைச் செலுத்தி மேன்மையை யடைந்தான். சுமுகன் தான் இழந்த திரவியத்தை நினைத்து விதனத்தை யடைந்தான்.

having given his thousand pagodas to the renowned learned-man, and having studied all sciences and become very learned, became poor, and having joined his friend Sumagan got a bare livelihood. Sumagan, intending to go to his own country, put all his riches upon camels and called Suvisêshan to accompany him. As they were going along through a forest, thieves attacked them and took away all his property. Afterwards they both became poor and arrived at their home. When things were in this state, when on one occasion the king who ruled over that country made it known that he was in want of a learned man, Suvisêshan went and displayed his learning and obtained honor. Sumagan thinking about his lost property became sorrowful.

ஆகையால், செல்வப் பொருளுக்குத் தீங்கு வரும்; கல்விப் பொருளுக்கு அழிவில்லை.

Therefore riches are destructible, but learning is indestructible.

* சநார்த்தன புரம், a place sacred to Vishnu.

* பொன், a small gold-coin.

௨௮-வது கதை.

தெற்குத்தேசத்தி லிருக்குமொரு தமிழன் சீவனமில்லாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கையில் அவன் வடதேசத்திலே யாகிலும் போய்ப் பிழைப்போமென்று ஆலோசித்துப் புறப்பட்டுப் போகும் வழியிலே தெலுங்கு தேசத்தில் ஒரு கிராமத்துக்கு அடுத்த சத்திரத்தில் ஒரு நாளிராத்திரி வந்து தங்கி யிருந்தான். வடதேசத்தி லிருக்கும் ஒரு வடுகன்

28th Story.

A Tamulian who lived in the south country being without a livelihood and in great straits, thought that he would go into the north country and get his living; after setting out, as he was going on his way he arrived one night at a choultry near a town in the Telugu country and stopped there. A Gentoo man who lived in the north

அன்னமுதலானவைகளுக்கு வரு
த்தம் *உற்றவனாய்த் தமிழ்த்தேசத்
திலேயாகிலும் போய்ச் சேவகம்
பண்ணிப் பிழைப்போம் என்று
கையிலே யீட்டியொன்றெடுத்து
க்கொண்டு ஊர்தோறும் யாசக
ஞ் செய்து போசனம் பண்ணிக்
கொண்டு அவனும் அன்று இராத்
திரி யந்தச் சத்திரம் வந்துசேர்ந்
து படுத்திருந்தான். விடியற்கால
ம் அந்த வடுகன் எழுந்து தெற்கே
போகவேண்டு மென்று தன் ஈட்
டியை யெடுக்கையில் அது தெற்
கேயிருந்து வந்த தமிழன் தொள்
ளைக்காதிலே மாட்டிக்கொண்டப
டியினாலே யவன் காதுகாதென்
று ஈட்டியைக் கெட்டியாய்ப் பிடி
த்துக்கொண்டான்; வடுகன் நாதி
நாதி யென்று ஈட்டியையிழுத்தா
ன். அப்படி யிருவரும் ஒருவன்
பேச்சு ஒருவனுக்குத் தெரியாம
ல் வாதாடிக் கொண் டிருக்கையி
ல் வடுகுந் தமிழுந் தெரிந்த வொ
ருவன் அவர்கள் இருவருக்குந்
தெரியச்சொல்லி விலக்கிவிட்டா
ன். ஆகையால் ஒரு தேசத்தில்
வழங்குகிறவார்த்தைதெரியாமல்
அந்தத் தேசத்திற்போய்ப் பிழை
ப்போமென்கிறது தப்பென்று அ
வ்விருவருந் தங்களுடைய தேசத்
துக்குப் போய்விட்டார்கள்.

country and who had suffered from the want of food, &c., thinking at any rate he would go and get service and gain a livelihood in the Tamil country, taking a spear in his hand he begged in every village and got his food. He also arrived the same night at that choultry and lay down. The Gentoo rose at dawn, and intending to go south, whilst taking up his spear because it was caught in the hole of the Tamulian's ear, he bawled out (Kâthu, Kâthu) "My ear! my ear!" and seized fast hold of the spear. The Gentoo said, Nâthi, Nâthi, *i. e*, "It is mine, it is mine," and pulled at the spear. Whilst they were thus jangling, the one not understanding the language of the other, a man who understood both Tamil and Telugu making them both comprehend the matter separated them. Therefore, those two persons concluding that it is a mistake to resolve to go to a foreign country in order to procure a livelihood when one does not understand the language which is spoken there, returned to their own country.

ஆகையால் சகல தேசத்து வா
ர்த்தையும் கற்றுக்கொள்ளுகிற
தே யாவர்க்கும் பிரயோசனம்.

Therefore it is advantageous to every body to learn the languages of all countries.

* உறுகிறேன், உற்றேன், வேன், உற, v. n. To be, to exist. This word is often joined to verbals or verbal roots to form new verbs, and the infinitive and other parts are used adverbially to express intensity, entireness.

உ௯-வது கதை.

ஓர் அரசன் பொக்கஷத்தில் அதி
கபணம் இல்லாமல் இருக்கக்க
ண்டு தன் மந்திரியைப் பார்த்து
நான் சத்துருக்களை யெல்லாம்
வென்று * தேசங்களைக் கட்டிக்

29*th Story.*

A king perceiving that there was not much money in the treasury called his minister, and said, "I have conquered all my enemies and seized their

கொண்டேன், எல்லா ராசாக்களும் எனக்குக் கப்பங்கட்டுகிறார்கள் ஆதலால் இப்போ தெனக்கொருவரும் எதிரிக ளில்லை, ஆகையா லிந்தச் சேனைகளை யெல்லாம் வைத்துக்கொண்டு வீணாகச் செலவுபண்ணுவானேன்? அவர்களையெல்லாந்தள்ளிப்போட்டுப் பொக்கஷத்தை நிரப்புவா யென்றான். மந்திரி யிது நல்ல யோசனை யன்று, நாஞ் சேனைகளைத் தள்ளின சமயம் பார்த்துப் பகையாளிகள் சண்டைக்கு வந்தால் அப்போது நமக்குக் கெடுதிவரும் ஆதலாற் சேனைகளைக் கைவிடலாகா தென்றான். ராசன் சேனை வேண்டியபோது வைத்துக்கொள்ளலாம், பணமாத்திரமிருந்தால் எந்தக்காரியமுங் கைகூடும் என்றான். மந்திரி பணச்செலவு பண்ணினாலும் நமக்கு வேண்டியபோது சேனைகள்கிடைக்கமாட்டாது, அதெப்படி? என்றால் இராத்திரிகாலத்தில் ஈக்களைக் கூட்டவேண்டும் என்று வெல்லங்களைக் குவித்து வைத்து ஈக்களைப் பிரார்த்தித்தாலும் அதில் வந்து மொய்க்குமா? ஆதலாற் சேனைகளை யின்னுங் கூட்டி வைத்தாற் சத்துருக்கள் பயந்து அடங்கி யிருப்பார்கள் என்றான். அரசன் இது மெய்தா னென்று மந்திரி சொற்படி நடந்தான்.

countries: all the kings pay tribute to me, therefore I have now not a single foe; consequently why should I keep all these armies, and be at an unnecessary expense? Disband them all, and you will fill the treasury." The minister replied, "This is not a judicious proposal: if our enemies, seeing the opportunity afforded by our disbanding our armies, come to fight against us, then mischief will befal us. Therefore it is not wise to give up maintaining our standing armies." The king replied, "When the armies are required we may raise them: if there be but money, every thing will meet with success." The minister rejoined, "Armies will not be procurable when we want them: if you ask 'how so?' if thinking to collect the flies you make a heap of jaggery in the night, though you should coax them will they come and swarm upon it? But if you still keep together your armies, the enemy will fear and be kept in check." The king said, "This is true," and acted according to the minister's advice.

* தேசத்தைக் கட்டிக்கொள்ள, inf. To conquer a country.

௩௰-வது கதை.

ஒரு வேடனை ஒரு புலி துரத்திக்கொண்டு வரும்போது ஓடியொருமரத்தின்மேல் ஏறிக்கொண்டான். புலி மரத்தின் கீழேயுட்கார்ந்துகொண்டு அந்தமரத்தில் இருந்த குரங்கைப்பார்த்து இவனைக் கீழே தள்ளிவிடு, இவன் வேடன் ஆகையால் * நம்மை யெல்லாங் கொல்லுகிறவன், மிகவும்

30th Story.

A tiger was chasing a hunter, when he ran and ascended a tree. The tiger lay down at the foot of the tree, and observing a monkey that was on the tree, said, "Throw him down, he is a hunter, a murderer of all of us, he is a thorough wretch." The monkey replied, "Though

பொல்லாதவனென்றது. குரங்கு-பொல்லாதவனானாலும் பயந்து என்னிடத்தில் வந்தவனுக்கு நான்பொல்லாப்புச்செய்யமாட்டேன், போவெனப் புலி கீழே காத்துக் கொண்டிருந்தது. பிறகு, குரங்கு வேடன் பசித்திருக்கிறதினால் அவனுக்குப் பழங்கள் கொண்டுவருகிறதற்குப் போயிற்று. அப்போது புலி வேடனைப் பார்த்து அந்தக் குரங்கின் குட்டி யங்கேயிருக்கிறதே அதைக்கீழே தள்ளு, நான் உன்னை விட்டுவிட்டு அதையெடுத்துக் கொண்டு போகிறேனென்றது. வேடன்—அப்படியே குரங்கின் குட்டியைக் கீழே தள்ளினான். புலி பழத்துக்குப்போன குரங்கு வந்தவுடனே சொல்லுகிறது—குரங்கே, உபகாரம்பண்ணின வுன் குட்டியை வேடன் கீழே தள்ளினானே, ஆதலால் அவன் பொல்லாதவன், அவனைக் கீழே தள்ளிவிடு, உன் குட்டியை விட்டுப்போகிறேனென்றது. குரங்கு — அவனைத் தள்ளமாட்டேனென்றது. புலி—துஷ்டனுக்கு உபகாரம் பண்ணுகிறாய், அதனாலுனக்குக் கேடுவருமென்று சொல்லி யதன் குட்டியையுந் தின்னாமற் போய்விட்டது. வேடன் குரங்கு கொண்டுவந்த பழங்களைச் சாப்பிட்டுப் பெண்சாதி பிள்ளைகட்குச் சாப்பாடு இல்லையென்று குரங்கு தூங்குகிறபோது அதைக் கொன்று எடுத்துக் கொண்டு போனான்.

ஆதலால், துஷ்டர்கட்கு உதவி பண்ணினால் இப்படி வரும்.

he is a very bad man, yet I will not injure one who through fear has come to me for protection: go away!" but the tiger remained waiting below. Afterwards, because the hunter was hungry, the monkey went to bring him some fruits. Then the tiger looking at the hunter said, "There is the monkey's young one up there, throw it down and I will take it away and leave you." The hunter accordingly threw down the monkey's young one. When the monkey who had gone for the fruit returned, the tiger said, 'O monkey! the hunter has thrown down the young one of you, his benefactor; therefore he is a wretch, throw him down, and I will leave your little one and go away." The monkey replied, "I will not throw him down." The tiger said, "You are doing a kindness to a wicked man, therefore mischief will befal you." So saying it went away without eating the young one. The hunter ate the fruit which the monkey brought, and thinking that his wife and children had nothing to eat, killed the monkey when it was asleep and took it away."

Therefore if you assist the wicked, thus will it happen.

* நாம், pro. The plu. and hor. of நான் when used by superiors to inferiors. Gen. நம்முடைய, used both in sing and pl. also நமது and poetic நம். It differs from நாங்கள் as including both the persons addressing and addressed, except in Poetry.

௩௰-வது கதை.

ஒரு பிராமணன் காட்டுவழியே தனியேவரும்போது அங்கேயொருபொறியில் அகப்பட்டு இர

30th Story.

As a Brahmin was going alone through a jungle, a tiger which had been caught in a

ண்டு நாளா யிரையில்லாமலிருக்
கிற வொருபுலி யவனைப் பார்த்து
நல்ல வார்த்தைகளினால் அழை
த்து ஐயா, என்னை யிதினின்றுந்
திறந்துவிட்டால் உமக்கு மிகுந்த
புண்ணிய முண்டு என்றுவேண்டி
க்கொண்டது. பிராமணன் நீ
துஷ்டமிருகம் ஆகையால் உன்னை
வெளியேவிட்டாற் கொல்லுவை
யே யென்றான். புலி யுபகாரம்
பண்ணின வுன்னைக் கொல்லு
வேனா? கொல்லேனென்று பல
விதமாக அவனுக்கு நம்பிக்கை
வரும்படிச் சொன்ன வுடனே பி
ராமணன் அதன் சொல்லை நம்பி
ப் போனைத் திறந்துவிட்டான்; வி
ட்ட வுடனே புலி பிராமணனைப்
பார்த்து நீ யெனக்கு இரையாக
வேண்டும், உன்னை நான் கொல்
லுவேன் என்றது. பிராமணன்—
உபகாரம் பண்ணின வென்னைக்
கொல்வது நியாயமா? என்றா
ன். புலி—மனிதர் முதலாகிய
பிராணிகளைக் கொல்வது எங்கட்
குச் சாதித்தொழில் ஆதலால்உன்
னைக் கொல்வது நியாயந்தான் எ
ன்றது. அப்படியிருக்கையில் அந்
தப் பிராமணன் இந்தச் சங்கதி
யை யொருத்தருடனே சொல்லி
யவர் சொல்லுகிற படி நடப்போ
ம் என்றான். பிறகு அங்கேவந்த
வொரு நரியுடனே பிராமணனு
ம் புலியும் இதைச் சொல்லும்
போது, நரி—எனக்கு நீங்கள்
சொன்னால் தெரியாது, புலி யெப்
படிபோனில் அடைபட்டிருந்தது?
நீயெவ்வாறு திறந்தாய்? அந்தப்ப
டி நீங்கள் என் கண்காண நடந்து
காட்டினால் நான் நியாயந் தெரிந்
து உங்கள் வழக்குத் தீர்ப்பேனெ
ன்றது. புலி நல்லதென்று அந்தப்
போனுக்குட் புகுந்தவுடனேபோ
ன் மூடிக்கொண்டது. நரி பிராம
ணனைப் பார்த்து மூடப்பிராம
ணா, துஷ்டனுக்கு உபகாரம் பண்
ணலாமா? பிராமணனுக்குப்
* பின்புத்தி ஆகையால் நீ யிந்

trap, and which had been two days without food, saw him, and having called out to him, respectfully entreated him saying, "Sir! If you open this and let me out, you will obtain great merit." The Brahmin replied, "You are a savage beast, and therefore will kill me if I let you out." The tiger said, "Shall I kill you, my benefactor? No, never." On his saying many things in order to make him believe, the Brahmin at last confiding in his word opened the trap. Immediately on its being opened the tiger looking at the Brahmin said, "You must be my prey. I will kill you." The Brahmin replied, "Is it right to kill me, your benefactor?" The tiger rejoined, "It is the nature of our species to kill men and other animals, therefore it is right to kill you." When matters were in this state, the Brahmin said, "We will relate the circumstance to another person and abide by his decision." Afterwards, when the Brahmin and the tiger had told this to a jackal which had come to the spot, the jackal said, "If you merely tell me I shall not understand; how was the tiger caught in the trap? how did you open it? accordingly if you will shew me before my own eyes what happened, I shall understand the right and will decide your case." The tiger said, "Very well!" and immediately on its getting into the trap it shut. The jackal addressing the Brahmin said, "You foolish Brahmin! may

தக் காரியம் பண்ணினாய், ஓடிப் போ வென்றது. பிராமணன் பிழைத்துப் போனான்.

one shew kindness to a wicked person? you did this according to the proverb, 'The Brahmin was wise too late.'" Run away. The Brahmin escaped with his life.

*பின்புத்தி, want of wisdom, folly, indiscretion. 2. After-thought, recollecting when it is too late. பிராமணனுக்குப் பின்புத்தி. The wit of a Brahmin comes afterwards.

௩௨-வது கதை.

ஓர் ஏரிக்கரையில் உட்கார்ந்திருந்த வொரு கொக்கானது அங்கே வந்த அன்னப் பக்ஷியைப்பார்த்து உனக்குக் காலும் மூக்குங் கண்ணும் மிகவுஞ் சிவந்திருக்கின்றன, நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? என்றது. அன்னம் நான் அன்னப் பறவை, தேவலோகத்திலிருந்து வருகிறேன் என்றது. கொக்கு— அங்கே நீ யெங்கே வாசம்பண்ணுகிறாய்? அதெப்படிப்பட்டது? சொல்லென்றது. அன்னம்-நான் மிகவுந் தித்திப்புந் தெளிவு முள்ள தண்ணீரையுடையதாயும் *மானச மென்னும் பெயரையுடையதாயும் இருக்கின்ற பெரிய தடாகத்தில்வாசம்பண்ணுகிறேன், அது பொன்மயமான தாமரைப்புஷ்பங்களாலும், நல்ல ரத்தினங்களாற் பண்ணப்பட்ட கரையினாலும், கற்பகம் என்கிற மரங்களாலும், அலங்கரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லினது. கொக்கு நல்லது, அதிலே நத்தைகளுண்டா? என்றுஆசையோடு கேட்டது. அன்னம்—நத்தையதிலில்லையென்றது. கொக்கு— சீ, நத்தையில்லாததென்ன தடாகம்? போ வென்றது.

32nd Story.

A heron, perching on the bund of a tank, saw a swan which had come there, and said, "Your feet, bill, and eyes are very red: who are you? and from whence have you come?" The swan replied, "I am a swan, and come from the celestial world." The heron asked, "Where do you reside there? what sort of a place is it? tell me." "I live in a great tank called Thâyumânasam, of very sweet and clear water. It is adorned with lotus flowers like gold, with banks made of beautiful gems, and the Karpagam tree;" said he. The heron said, "Good!" and asked with zest, "Are there snails in it?" The swan replied, "No; there are no snails in it." The heron replied, "Tush! what is a tank without snails? Go your way!"

ஆதலால் ஈன மனிதர்கள் தங்களுக்குச் சந்தோஷமான காரியம் குற்றமுள்ளதாயிருந்தாலும் அதை நல்லதாக நினைக்கிறார்கள், அல்லது மனிதர்கள் தங்கட்கு

Thus low-minded men deem a thing that gratifies them good, though it be bad: or men think

வேண்டிய ஆகாரம் இல்லாத விடத்தைக் குறைச்சலாக நினைக்கிறார்கள்.

that place an inconvenient one where there is not the food which they deem necessary.

* மானசம், மானதம். The mind, faculty of reason, as மனசு, மனது 2. Thought, attention. நினைவு, 3. A lake on the Himalaya mountains. 4. A fancied tank, as மானதவாவி.

௩௩-வது கதை.

இரண்டு பிள்ளைகள் வடதேசத்துக்குப் போய் வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். அவர்களில் ஒருவன் காதிற் கடுக்கன் போட்டிருந்தான். மற்றொருவன் சினேகிதத்தினாலே சற்றே யுன் கடுக்கனைக் கொடு, என் காதிற் போட்டுப் பார்த்துத் தருகிறேன் என்று வாங்கிக் காதிற் போட்டுக்கொண்டான். இரண்டுநாள் *வரைக்குங் கொடாமையினாற் கடுக்கனுக்கு உடையவன் என் கடுக்கனைக் கொடு என்றான். உனக்கேது கடுக்கன்? என் கடுக்கனாச்சுதே யென்றான். இப்படி யிருவரும் வழக்கிட்டுக்கொண்டு போய் நியாயாதிபதியினிடத்திலே சொல்லிக்கொண்டார்கள். இதற்கொன்றுஞ் சாக்ஷிகள் இல்லாமையால் நியாயாதிபதிக்கு ஒன்றுந் தோன்றாமல், நல்லது, நீங்கள் வீட்டுக்குப் போய் வாருங்கள் என்றான். ஆனால் அவர்கள் அறியாமலவர்கள் பின்னே தன் மனுஷனை யனுப்பி யவர்கள் வீட்டிலே பேசிக்கொள்ளுகிறதைக் கேட்டுக்கொண்டு வாருங்கள் என்றான். அப்படியே போனார்கள். கடுக்கனுக்கு உடையவன் வீட்டிற் போனவுடனே யவனுடைய தகப்பன் மகனே கடுக்கனெங்கே? யென்றான், மற்றொருவனை யவனுடைய தகப்பன் மகனே கடுக்கனெங்கே சம்பாதித்தாய்? என்றான். நியாயாதிபதி யதைக் கேள்விப்பட்டுக் கடுக்கனை வாங்கிச் சொந்தக்காரன் கையிற் கொடுத்தான்.

33rd Story.

Two youths went to the north country and returned home. One of them wore an ear-ring in his ear. The other, because he was his friend, said, "Lend me your ear-ring a little while, I will put it in my ear and see how it looks, and return it to you." So saying he received it and put it in his ear. Because he did not return it for two days, the owner of the ear-ring said, "Give me my ear-ring." He replied, "What ear-ring have you? It is my ear-ring." Thus they two went on quarrelling, and made the matter known to the magistrate. Because there were no witnesses in the case, and nothing was apparent to the magistrate, he said, "Very well! go home and come again;" but without their knowledge he sent his servant behind them, saying, "Listen to what is said in their house, and come and tell me." Thus they went away. Immediately on the owner of the ear-ring entering the house, his father said, "My son! where is your earring?" The father of the other said, "My son! where did you get your ear-ring?" The magistrate on hearing this took the ear-ring and gave it into the hands of its owner.

*வரை. Measure, limit. நாளதுவரைக்கும், up to the present time.

௩௪-வது கதை.

ஓர் அரசன் தன்பட்டத்துக் குதிரை யிறந்து போனதைக் குறித்துத் துயரப்படும் போது பிரதானியானவன் ஐயா வென்னையனுப்பினால் அரப்பிதேசத்துக்குப் போய் நல்ல குதிரை கொண்டு வருகிறேனென்றான். அப்படியே யதற்குவேண்டிய திரவியத்தைக் கொடுத்தனுப்பினான். அவன் அத்தேசத்துக்குப்போ யிராசனிடத்தின் முன் னிருந்த பரியிலும் அதிவேகமுங் குணமுமுள்ளதாய்ப் பதினாயிரம் ரூபாய்க்கு ஓரசுவம் வாங்கிக்கொண்டுதன்தேசத்தை நோக்கி மீண்டுவருகையி லிடைவழியிலொரு சத்திரத்தில்இரவிறங்கியிருக்கும் போது அவ்விடத்திருடர் பயமுள்ளது ஆகையாற் குதிரைக்காரனைப் பார்த் திங்கே சோரபய முண்டு ஆதலால் நீ தூங்காமல்விழித்திருக்கவேண்டும், அதற்காக யாதொரு பெரியகாரியத்தைக்குறித்து ஆராய்ச்சிபண்ணிக்கொண்டிருந்தாயானால் தூக்கம் வராதென்று உபாயமுஞ் சொல்லிக்கொடுத்துவிட்டுப் படுத்துக்கொண்டான். மறுபடிப் பிரதானி யிரண்டாம் யாமத்தில் விழித்துக்கொண்டு குதிரைக்காரா விழித்திருக்கிறையா? என்னா? என; ஆமையாவென்றான். என்ன வாலோசித்துக் கொண்டு? என்றான். இந்தவானத்தில் இவ்வளவு நக்ஷத்திரங்களைப்பண்ணிப் பதித்தவனார்? என்றாலோசிக்கிறேனென நல்லது அப்படியே விழித்திரு என்று உறங்கிப் போய் மூன்றாஞ் சாமத்தில் அப்படியே குதிரைக்காரனைக் கூவி யிப்போதென்ன வெண்ணுகிறாய்? என; ஐயா இக்கடல் தோண்டினவன் யாரோவென்றும் அந்த மண்ணை யெங்கே போட்டானோவென்றும் ஆராய்கிறேன் *என; நல்லது, சாக்கிரதையாயிருவென்று படுத்துக் கொள்ளுகையின்

34th Story.

When a king was lamenting on account of the death of his state horse, his prime minister said, "Sir! if you send me, I will go to Arabia and bring you a good horse." Accordingly he gave him the requisite money and sent him. He went to that country and bought for ten thousand rupees a horse more swift and gentle than the charger which he had before. On returning, as he was remaining for the night at a choultry about half way, because there was a fear of robbers in the place, he addressed the horse, keeper, "Here there is some fear of robbers, therefore you must watch and not fall asleep. In order to secure this, if you continue to reflect on any important subject sleep will not overtake you." Thus giving him this expedient, he left him and lay down. The minister again awoke during the second watch, and said, "Horsekeeper! are you awake? Eh?" "Yes, Sir!" he replied. "What are you considering about?" he said. "I am thinking who it is that created and set so many stars in this firmament," he replied. "Very well! so keep awake" he said, and dropped off. In the third watch he thus called the horsekeeper and said, "What are you now thinking about?" "Sir, I am investigating the question who dug this ocean, and where he put all the earth that was dug out," said he. "Very well! look sharp," so saying he lay down again; the horsekeeper, after the lapse of

மீண்டு குதிரைக்காரனுஞ் சற்றுநேரந் தன்னை மறந்து தூங்கி விழித்துக்கொள்ளுதற்குள்ளேயொரு திருடன் அந்தக் குதிரையைக் கொண்டுபோய்விட்டான். பிறகு யசமானன் விழித்துக் குதிரைக்காரா வெதைக்குறித்து நினைக்கிறாய்? என்றான். குதிரைக்காரன் ஐயா குதிரைதான் களவுபோய்விட்டதே, இருக்கிற சேணமுதலிய சாமானை நீரெடுத்துக்கொண்டுவருவீரோ அல்லது நானே யெடுக்கவேண்டுமோவென் றாலோசிக்கிறேனென்றான். பிரதானி- ஐயோ! குதிரை போய்விட்டதா? என்றோடிவந்து பார்த்து மோசம்போனேனே யெனத் துக்கித்துக்கொண்டு அரசனிடத்திற்குப் போய்விட்டான்.

a little time, forgetting himself fell asleep, and before he awoke a thief stole away the horse. Afterwards the master also awoke and called out, "Horse-keeper! what are you thinking about?" The horsekeeper replied, "Sir! the horse is stolen, no doubt: and I am thinking whether you will carry the saddle and other trappings, or whether I shall have to carry them." The minister cried out, "Alas! has the horse gone?" and running and looking about he said, "I am undone," and went sorrowing to the king.

*என. A numeral connective particle.

௩௫-வது கதை.

சகதிலகமென்னும் பட்டணத்திலிருக்கும் ஓரரசனொருநாள் அதிகாலையி லெழுந்து தன்னரமனைக்குப்பின்னே யிருக்கும் இராஜவீதியை யெட்டிப் பார்த்தபொழுது அங்கே கடைகளிலே சிந்திக்கிடக்கும் பண்டங்களைப் பொறுக்கிக்கொண்டிருந்த வொருசின்ன வேளாளப்பிள்ளையை அந்த ராஜன் கண்டு மறுபடித் தலையை யுள்ளே வாங்குகிறபோது வாசற்படி தலையிலிடித்துக் கொஞ்சம் இரத்தங் கண்டது. இன்று நாம் உதயகாலத்தெழுந்து இவன் முகத்தைப் பார்த்ததால் நமது தலையிற் காயம்பட்டு உதிரங்கண்டது, இப்படியே நாடோறும் இவன்முகத்தை யெத்தனை மனிதர் பார்ப்பார்களோ! அவர்களுக்கெல்லாம் என்னென்ன பொல்லாங்குநேரிடாது, ஆகையால் வெகுஜனவிரோதியைப் பூமியில்வைப்பது தருமம் அன்று என்று அங்கிருந்தபடியே கொலையாளிகளை யழைப்பித்து இந்தப்பிள்ளையைக் கொ

35*th Story.*

A king who lived in a town called Jagathilagam one day rose early in the morning and peeped out into King street, which was behind his palace. A little Vèlâla boy, who was picking up the various things which lay scattered in the bazaars, saw the king, who, as he was again taking his head in, struck it against the top of the door-frame and drew blood. "To-day, having risen early, through seeing his face my head has been wounded and blood drawn; how many persons thus see his face daily! how much evil will happen to them all! therefore it is no charity to keep the enemy of many people in the world." So saying, on that very spot he called the executioners and said, "Take this boy and cut off his head." They came, and seiz-

ண்டுபோய் வெட்டிப்போட்டு வா
ருங்கள் என்றான். அவர்கள் வந்து
இந்தச் சிறுப்பிள்ளையைப் பிடி
த்துக்கொண்டு உன் முகத்தில்
விழித்ததினால் ராசாவுக்கு வா
சற்படி தலையிலிடித்துதிரங்கண்
டதினால் உன்னைச் சிரச்சேதம்
பண்ணச் சொன்னார், வாவென்
றிழுத்தார்கள். அதைக் கேட்டிந்
தப்பையன் நான் ராசாவைக்கண்
டொரு வார்த்தை சொன்னபிற
கு வெட்டிப்போடுங்களென்றுஅ
வர்களைக்கெஞ்சிக் கேட்டுக்கொ
ண்டான். அவர்கள் அதை யிரா
ஜாவுக்குஅறிவித்துஅவருத்தரவி
னாலிவனை ராசன்முன் கொண்டு
போய்விட்டார்கள். இந்தப் பை
யன் ராஜாவைப்பார்த்து வணங்
கி ஓ மகாராசனே! இப்போதுஉம
க்குண்டாகிய அற்பவுபத்திரவம்
இன்றைக்கு முதல் என் முகத்தி
ல் விழித்ததினாலே சம்பவித்தது
என்று என்னை வெட்டிப்போடச்
சொன்னீர், தூங்கியெழுந்து முத
லுமது திருமுகத்தைப் பார்த்த
வெனக்கிப்படித் தலைபோகத்தக்
க பொல்லாங்கு நேரிட்டதே, இ
தற்கு என்ன தீர்ப்பென்று கேட்டு
க்கொண்டு பிறகென்றலை கொடு
க்கலாம் என்று வந்தேன் என்று
சொன்னான் அதைக்கேட்டு ராசா
திடுக்கிட்டு வெட்கப்பட்டவனைத்
தனக்குள்ளே * மெச்சிக்கொண்
டு அவனைத்தன்னரமனையில் வை
த்துக்கொண்டுசகலகலையும் படிப்
பித்துப்பின்பு தனக்கு மந்திரியா
க வைத்துக்கொண்டான்.

ing the boy said, "By seeing your face the king struck his head against the door-frame and drew blood; therefore he has ordered us to behead you, come along." So saying they dragged him along. The boy on hearing this entreated them saying, "After I have seen the king and spoken a word to him, put me to death." Having informed the king (*of this*) by his command they brought him before him. The boy on seeing the king saluted him and said, "O great king! under the impression that the trifling inconvenience which has now happened to you occurred by seeing my face early to-day, you told them to execute me; after sleeping and getting up I first saw your countenance, and have had the dreadful misfortune of endangering my life. I have come to ask what decision you will give about this matter, and then I will give up my life." On hearing this the king was afraid and ashamed, and within himself applauding the boy kept him in his palace, and having had him instructed in all sciences afterwards made him his minister.

*மெச்சு, கிறேன், மெச்சினேன், வேன், மெச்ச, v. a (also மெய்ச்சு) to admire greatly, to wonder.

௩௬-வது கதை.

ஓர் ஆற்றங்கரை மரத்தின் கி
ளையில் தூக்கணாங்குருவி கூடுக
ட்டி முட்டையிட்டுக் குஞ்சுபொரி
த்திருக்கையில் ஒருநாள் காற்றடி
த்துப் பெருமழை பெய்யும்போ
து அம்மரத்தின் அடியிலொரு கு

36th Story.

A Loxia bird having built its nest in the branches of a tree on the bank of a river, laid eggs, and after hatching them, one day when the wind was blowing, and there was

ரன்று காற்றினாலும், மழையினாலும் அடிபட்டு வருத்தப்படுகிறதை அக்குருவி கண்டு ஓ வானரமே! நானெவ்வளவுண்டு? நானுமல்லவோ காற்றுக்குமழைக்குங் கெடுதியில்லாத கூடுகட்டிக்கொண்டு குஞ்சுகளுடனே சவுக்கியமாயிருக்கிறேன், உனக்கு மனிதரைப் போலவே காலுங் கையும் இருக்கிறதல்லாமல் ஒருவாலுமிருக்கிறதே, அப்படியிருந்தும் இப்படிப்பட்ட வாபத்துக் காலத்துக்கு உதவத்தக்கதாக ஓரிடஞ்செய்துகொள்ளலாகாதா? என்றுசொல்ல; அக்குரங்குக்கு கோபம்வந்து நீயா? எனக்குப் புத்தி சொல்லுகிறதென்று அம்மரத்திலேறியதின் கூட்டைப் பிடுங்கிக் குஞ்சுகள் சாகும்படியாய்ச் சலத்திலெறிந்துவிட்டது. அப்பொழுது அந்தத்தூக்கணங்குருவி விசனப்பட்டு தான் நியாயஞ் சொன்னால் அதற்கு அநியாயஞ் செய்யலாமோவென்று அவ்வூர் நியாயாதிபதியுடனே சொல்ல அவன் அதைக்கேட்டு அதர்மஞ்செய்த குரங்கைத் தண்டிக்கவேண்டுமென்று அதையழைப்பிக்க; அது மிகவும் பயந்து வருகிற வழியிலே யொரு பலாப்பழத்தை யறுத்தெடுத்துக் கொண்டுவந்து நியாயாதிபதி பின்னாலேவைத்து முன்னாகவந்து கும்பிட்டது. அதைப் பார்த்து ராசா கண்கள் சிவந்து பல்லைக் கடித்துக் கெட்டகுரங்கே நீ மழையினாலே படுகிற வருத்தத்தைப் பார்த்து அந்தச் சாதுவான தூக்கணங்குருவி யுபகாரவார்த்தைசொன்னால் அதற்கு அதின் குஞ்சுகளையுங் கொன்று கூட்டையுங் குலைத்தாயல்லவோ, உன்னைக் கத்திக்கித்தனைச் சதையாய் அறுக்கிறேன், அப்படி நில்லென்று உறுக்கினான். குரங்கு நீதிக்காரனைப் பார்த்துக் கும்பிட்டு ஆண்டவரே முன்பின்பார்த்துப் பேசவேண்டுமென; நியா

heavy rain, seeing at the foot of the tree a monkey pelted and distressed by the wind and rain, said, "O monkey! what am I? yet even I have built a nest-proof against the wind and rain, and am comfortable with my little ones; you have hands and feet like a man and a tail too, and yet cannot you construct a place for refuge in such a time of distress?" The monkey got angry and said, "Do you pretend to give advice to me?" so saying it climbed the tree, and seizing the nest threw it into the water, so killing the young ones. Then the Loxia bird mourning went to the magistrate of the town and said, "If one says what is right may another do an injustice in return?" he, on hearing the case sent for the monkey which had done the uncharitable action, intending to punish it. As it came on the way in great fear it plucked a jack fruit, and having brought it put it behind the magistrate, and coming before him prostrated itself. The magistrate, looking at it with eyes reddened with anger and clenched teeth, said, "Wicked monkey! when the gentle Loxia bird saw the distress you suffered from the rain and spoke to you kindly, you in return destroyed its nest and killed its young, did you not? I will cut off so much of your flesh with the sword; so stand where you are." Thus he threatened it. The monkey looked at the magistrate, and prostrating itself said, "My Lord! we must look before and behind and

யாதிபதி இதென்ன? இப்படிச் சொல்லுகிறதென்றுபின்னே கடைக்கண்ணாற்பார்த்தான். அங்கே பொற்குடம்போல் ஒரு பலாப்பழம் கிடப்பதைக் கண்டு பின்பு கனைத்துக்கொண்டு சற்று ஆலோசிக்கிறவனைப்போல் இருந்து மறுபடி வாதியாகிய குருவியைப்பார்த்து அற்பப்பிராணியே! உனக்கித்தனைக்கர்வமென்ன, மலைபழுத்தாற்போலிருக்கிற வித்தனைப்பெரிய வானரத்துக்கு நீயா? புத்திசொல்லுகிறது, இனி யிந்தத் துஷ்டபுத்தியைவிட்டுப் பெரியார் சிறியாரென்கிற * தாரதம்மியத்தோடேபிழைத்துப் பயமுண்டாயிரு, இப்போது உன்னை மன்னித்தேன் போவென்று, பிறகு குரங்கைப் பார்த்திந்த ஈனஜெந்து செய்த தப்பிதத்தை மனம் பொறுவென்று பிரியவசனஞ் சொல்லிப் புகழ்ந்தனுப்பிவிட்டான்.

then speak." The magistrate thought "What does it mean by saying so?" and looked behind him out of the corner of his eye. On seeing a jack fruit like a vase of gold lying there he hemmed, and like one bethinking himself a little looked at the complainant bird and said, "Insignificant thing! why are you so proud? you do venture to give advice to so great a monkey, (like a mountain?) Leave off this bad course, and live in fear regarding the proper relation between old and young; I have forgiven you this time; go" said he. Afterwards he looked at the monkey and said obligingly, "Bear with the offence which this low creature has committed," and after praising it sent it away.

*தாரதம்மியம், s. A Sanscrit compound implying more or less, greater or smaller, longer, superior or inferior, (ex தாரம், et தமம், affixes of the comparative and superlative degrees.)

௩௭-வது கதை.

ஒரூரிலிருந்த மூக்கறையன் ஒருவன் தன்னைப்பார்க்கும்பலரும் நகைக்கிறதை யாற்றக்கூடாமல் தனக்குள் ஒருபாயத்தை யெண்ணிச் செய்ததாவது — ஒவ்வரு வேளையி லிருந்தாற்போலிருந்து வானத்தை யேறெடுத்துப்பார்த்து லோக கர்த்தாவே! உம்மைச் சிந்திக்கிறேன், வாழ்த்துகிறேன் வணங்குகிறேன், இப்பாபமான பிரபஞ்சத்திற் கிடந்து வருந்துகிற விந்தக் கொடியேனுக்கு உமது திருக்கைக் கொடுத்தருளும், உமது திருமேனிப் பிரகாசத்தை யெதற்கொப்பிடுவேன்? என்று இவ்வாறு கண்ணீர்ததும்ப வுடம்பு சிலிர்த்து நடுங்க வாய்குழறிச் சொல்லிப் பின்பு சூழ்ந்து நிற்கிற ஜனங்களைநோக்கிச் ஜனங்

37th Story.

In a certain village a man who had his nose cut off being unable to bear the derision of many who spoke to him, devised a scheme within himself and carried it out as follows: occasionally he would lift up his head suddenly and looking at the sky say, "Lord of the world! I muse on thee: I adore thee: I worship thee: stretch out thy sacred hand to me a sinner who am suffering in this sinful world: to what shall I liken the splendour of thy sacred form?" saying this with eyes suffused, hair on end, his body trembling, and his speech stammering with emo-

களை யிதோ நிற்கிற கடவுளைப்பாருங்களேன், ஐயோ! வீணாக நின்று காலங் கழிக்கிறீர்களேயென்று இரங்குவான். இதைச் சிலர் நம்பி ஐயா வெங்கள் கண்கட்குஞ் சுவாமியைத் *தெரிக்கவேண்டுமென்று காலில் வீழ்ந்து இரந்தபோது, மூக்கறையன் சுவாமி யெளிதில் தெரிவாரோ, என்னைப்போல் மூக்கில்லாமலிருந்தாற் காணலாம் என்றுசொல்ல, அவர்கள் அப்படி மூக்கறுத்துக்கொண்ட பிறகுஞ் சுவாமி தெரியாமல் இவன்மோசஞ் செய்தானெனத் தெரிந்து மூக்கிருக்கிறவர்கள் தங்களையும் நகைப்பார்களேயென்று நினைத்துச் சுவாமி யெங்கள் கண்ணுக்கும் நன்றாகத் தெரிகிறார், கொஞ்ச நஷ்டத்தினால் எவ்வளவு பெரியலாபம் பெற்றோம், என்ன ஆனந்தத்தை யனுபவிக்கிறோம்! என்று சொல்லிக்கொண்டார்கள். இதை நம்பி யவ்வூரார் எல்லாருஞ் சிலநாளையின் மூக்கறுத்துக்கொண்டார்கள்.

ஆதலால் கெட்ட மார்க்கத்திலிருக்கிற வொருவன் மற்றவர்களையும் அதிலிழுக்கப் பிரயாசப்படுவான்.

tion, he afterwards looked on the people who were standing about and said, "O people! behold the deity who is standing here. Alas! you stand and spend your time in vain!" so he would pity them. Then some of them believing this, fell at his feet and entreated him saying, "Sir! you must reveal the deity to our eyes too." The man who had lost his nose said, "Will the deity appear easily? If you were like me without noses you might see him." Accordingly, after they had cut off their noses, and still did not see the deity, having ascertained that he had played them a trick and thinking that those who had noses would laugh at them also, they kept saying, "The deity appears clearly before our eyes: by a trivial loss how great a gain we have obtained! what delight we enjoy!" Believing this, all the inhabitants of that village within a few days cut off their noses.

Thus, one who is following a wicked course of life will endeavour to draw others into it.

*தெரிக்க. To make evident, to bring, to view (a change of தெருவிக்க.)

௩௮-வது கதை.

ஓரேழைப்பிராமணன் தனக்குப் பாக்கிய வேண்டுமென்கிற வாசையினால் ஒரு குளத்தின்மேற்பக்கத்தி லிருந்துகொண்டு சாமியைநோக்கித் தபசுபண்ணினான். அதை பார்த்துப் அவனுக்குப் பக்கத்துவீட்டு பிராமணனும் அந்தக்குளத்தின் கிழ்பக்கத்திலிருந்து சாமியைக்குறித்துத் தவஞ் செய்தான். இவ்வாறு சிலநாள் போனபிறகுசாமியவர்களிலொருவனிடத்திற்கு வந்து உனக்கெ

38th Story.

A poor Brahmin was worshipping his swamy on the west side of a tank with the desire of obtaining riches. On seeing this, the Brahmin who lived next door to him worshipped the swamy on the east side of the tank. After the lapse of some days spent in this way, the swamy came to one and asked, "What do you want?" He replied, "You

ன்னவேண்டும்? என்றார். அவன் அந்தப் பக்கத்திலிருந்து தவஞ்செய்கிறவன் உம்மையென்னகேட்பானோ? அதற்கிரண்டு *மடங்கெனக்குண்டாக வேண்டுமென்றான். பின்பு சாமிமற்றொருவனிடத்திற்குப்போயுனக்குவேண்டுவதென்ன? என்றார். அவன் அந்த பக்கத்திலிருக்கிறவன் உம்மைக்கேட்டதென்ன? என்றான். அவன் நீகேட்பதற்கிருமடங்கு தனக்குள்ளதாக வேண்டுமென்றானென்றார். இவனுமவனுக்குத் தன்னிலுமதிகபாக்கியம் வரலாமாவென்கிறபொறாமையினாலே சுவாமியெனக்கொருகண் கெட்டுப்போகவேண்டுமென்றான். சுவாமி நகைத்து நல்லதென்றார். அதனாலிவனுக்கொருகண் கெட்டவுடனே மற்றவனுக்கிரண்டுகண்ணுங் கெட்டுப்போய்விட்டது.

ஆதலால் பொறாமைக்குணமுள்ளவனொருவன்கெடுகிறதையே தனக்குப் பாக்கியமாக நினைப்பான், தன்னுடையநஷ்டமும் பாரான்

must give me double what he who is on the other side of the tank asks for." Afterwards the swamy went to the other and asked, "What do you want?" "What has the fellow on the other side requested of you?" he asked. "He desires to have double what you ask for," he replied. Envious lest he should receive more riches than himself, this man said, "Swamy! let one of my eyes be destroyed." The swamy laughed and said, "Very well." So immediately on his one eye being destroyed, the two eyes of the other were destroyed.

Thus an envious man deems the ruin of another a blessing to himself, and does not regard his own loss.

*மடங்கு. An eight or twenty-five pounds, a mound, as மணங்கு. 2. Measure, quantity, fold, times, இருமடங்கு. Two-fold, twice as much, as many, &c.

௩௯-வது கதை.

பாண்டியராசன்மனைவி யொருநாள்அரசனைநோக்கியொருவருத்தமான வேலையுஞ்செய்யாமற்பேச்சுத்துணையாக விருக்கிற மந்திரிக்கு ஆயிரம்வராகன் சம்பளமும் எப்பொழுதும் வருந்தியிரவும்பகலும் வேலைசெய்கிற மற்றவர்கட்கு இரண்டுவராகன்மூன்று வராகன்விழுக்காடு அற்பசம்பளமும் பண்ணி இருக்கின்றீர், இது முறைமையன்று என்றெனக்குத் தோன்றுகின்றதென்றாள். அரசன் நல்லது, இதற்கு நியாயத் திருஷ்டாந்தமாயுனக்கறிவிப்பேன், பாரென்றுஅங்கிருந்

39th Story.

The wife of the Pandian king one day addressed him as follows, "It appears to me not right that a minister who performs no hard labor at all, but merely gives assistance by talking, should receive a salary of a thousand pagodas, whilst others who work hard day and night are paid low wages at the rate of two or three pagodas". The king replied, "Very well; I will shew you the justice of this by an example:" Accordingly he put into two

தபடியே யிரண்டுசெமிழ்ற் சாம்பலுமயிரும்போட்டு மூடி முத்திரித்து மந்திரியையுந் தன்மனைவிசொன்ன வொருசேவகனையும் அழைப்பித்துஅவர்களிருவர்கையிலு மிரண்டுசெமிழையுங் கொடுத்துச்சொல்லினதாவது—நீங்களிருவரும் வெவ்வேறு இரண்டரசர்களிடத்திற் சென்று இதைக்கொடுத்துவிட்டு உடனே வருவீரென்றவுடனே யப்படியே போனவர்களின் மந்திரி சேர ராசனைக்கண்டு பாண்டியராசா வுமக்கிதைக்கொடுத்துவரச் சொன்னார் என்று தக்க வுபசாரத்தோடு செமிழைக்கொடுத்தனன். சேரராசன் அதைத்திறந்துள்ளேயிருந்த சாம்பலையு மயிரையும் பார்த்து ஆ! இதென்ன? என்று கோபக்குறியுடனே கேட்டான். மந்திரியும் அந்த வஸ்துக்களை யப்போது தான்பார்த்தாலும் உடனே சொன்னதாவது—ஐயா! எங்களரசனொருயாகம்பண்ணினார், அதிற்பிறந்த வொரு பூதந் தந்தசாம்பலுஞ் சடைமயிரிலுஞ் சிறிது உங்கட்கனுப்பினார், இதனால் அரசர்கட்கு வெகு நன்மையுண்டாகும், தாங்கள் இவைகளை மிகவும் அருமையாகக் காப்பாற்றவேண்டும் என்றான். சேரன் அது கேட்டவுடனே மிகவுங்களித்து மர்திரிக்கு வெகுமானம்பண்ணிச் செமிழனுப்பின பாண்டியராஜனுக்கும் அநேக அரும்பொருள்களும் அனுப்பினான். சேவகனோ என்றால்—சோழனிடத்தில் தான்கொண்டுபோன செமிழைக்கொடுத்து வணங்கினவுடனே யரசன் திறந்து சாம்பலையுமயிரையுங் கண்டு இதென்ன? என்றான். சேவகனும் பார்த்து ஒன்றுஞ் சொல்லாதிருந்தபடியால் பாண்டியனென்னை யிப்படியவமானம்பண்ணலாமா? என்று கோபித்துச் சேவகனைப்பிடித் தடித்துத்துரத்தினான். பிறகு பாண்டியன் போனமந்தி

boxes which were there, ashes and hair, and having shut and sealed them called the minister and a peon whom his wife named, and having committed the two boxes into their hands he said as follows, "You two go to different kings, and after each delivering this, immediately return." Forthwith the minister, on seeing the Sêra king, said, "The Pândia king ordered me to give you this and return;" and with due respect he presented the box. The Sêra king, on opening the box, seeing the hair and ashes inside, asked with signs of anger, "Ah! what is this?" Although the minister also then for the first time saw the contents, he immediately replied, "Sir! our king made a sacrifice, and has sent you some of the ashes and a tuft of hair which a spirit that appeared in it gave to him. By means of this kings will gain great benefit, you must preserve them very carefully." Sêran immediately on hearing this was much pleased, and having rewarded the minister sent many valuable presents to the Pândia king who had sent him the box. But as to the peon he having given the box which he had taken to the Sêra king immediately on his having saluted him the king opened it, and seeing the ashes and hair said, "What is this?" the peon also looked, and because he was silent the king said, "Should the Pândia king insult me thus?" and being enraged, seized the peon and beat him and cast him out. Afterwards the Pândia king, the

ரியுஞ் சேவகனும் வந்தமாத்திரத்தில் நடந்தசெய்திகளை யவர்களால் தன்மனைவிக்கறிவித்தியார்க்கதிகசம்பளம் பண்ணத்தக்கது சொல்? என்றான். பட்டமகிஷி வெட்கப்பட்டுச் சும்மாவிருந்துவிட்டாள்.

instant that the minister and peon who had gone returned, made known to the queen by them what had transpired, and then said, "To whom is it right to give the greatest salary? tell me." The queen was ashamed, and remained silent.

*பட்டம், a piece of gold worn on the forehead as an ornament or bode of distinction. 2 A title, an appellation of dignity, a title of office.

௪௰-வது கதை.

ஒரு கல்விமான் ஒரு பட்டணத்துக்குப் போனபோது அவ்விடத்தில் தேசாந்தரிகளுக்கு விருந்திடுகிற வுதாரமுள்ள வொருவனைக்குறித்துக் கேள்விப்பட்டான். அதற்குமேல் தன்னுடைய பழந்துணியுடனே யவனிடத்திற்போய்க் காத்திருந்தான். அவ்வுதாரி யிவனுக் கோருதவியுஞ் செய்யாதிருந்ததும்அன்றியுட்காரவும்இடங்கொடுக்கவில்லை. ஆதலால் அந்த எழுத்துவாசனையுள்ளவன் கலக்கப்பட்டுப் போய்விட்டு மறுநாளொரு சிறப்பானவுடுப்பையிரவலாகவாங்கி யதையுடுத்திக்கொண்டு, அங்கேமறுபடியும்போனான். அவன் இவனைக்கண்டவுடனே மரியாதைபண்ணித் தன் அருகிலுட்காத்தி வார்த்தைசொல்லிக்கொண்டிருந்து பின்புவந்தவனோடு போசனத்திலுட்காந்தவுடனே யிந்தக் கல்விமான் ஒரு கவளத்தை யெடுத்துத் தன் உடுப்பின்மேலே போட்டான். அதை வீட்டுக்காரன்பார்த்து நீ யேனிதை யிப்படிச் செய்தாய்? என அப்போது அவன்சொன்னது—நான் நேற்றுப்பழந் துணியுடனே வந்தபோது யாதொரு சாப்பாடுங் கிடைக்கவில்லை இப்போது நன்றாயுடுத்திக்கொண்டு வந்தபடியால் இதோ பார் நேர்த்தியான போசனங் கிடைத்தது.

40th Story.

A learned man having gone to a certain town, heard of a liberal man in that place who gave food to strangers, accordingly he went and waited on him in his worn-out cloth. The liberal man not only did not shew him any kindness, but did not even offer him a seat. Therefore the man of letters went away disconcerted, and next day having borrowed a fine cloth put it on and went there. The man immediately on seeing him saluted him and made him sit near him, and after they had conversed, when he was sitting at food with the new-comer, the learned man took up a mouthful of food and put it in his cloth. The master of the house on seeing this asked, "Why do you do this?" Then he replied, "Yesterday when I came with an old cloth I did not get any food at all: now because I have come well-clothed, see, I have got a splendid meal.

ஆதலால் இந்தச்சாப்பாடு என் துணிக்கல்லது எனக்குப் போட்டதா? என்று பிரதியுத்தரவு கொடுத்தான். அப்போது அந்தவீட்டுக்காரன் தனக்குள்ளே வெட்கப்பட்டுப் போக்குச் சொல்லிக் கொண்டான்.

Therefore is not this food given to my cloth and not to me?" Then the master of the house was ashamed within himself, and made an apology.

*தேசாந்தரி, lit. a foreigner. 2. (fig), a traveller to foreign countries, a wanderer.

முற்றிற்று.

ERRATA.

Page.	*Line.*	*For*	*Read*
3	9	nitch	niche.
4	18	of	off.
=	9	of	is.
5	7	grace	graze.
=	8	a high	high.
6	5	powder	powdered.
=	5	grave	chisel.
=	31	cast	caste.
7	38	Poeetic	Poetic.
10	14	et	let.
23	29	are	is.
=	38	aurney	Journey.
28	28	who	whom.
91	22	*	=
94	10	terminationly	termination, ly.
95	18	* என்று	* ளோ.

28/6/72